தனிப்பிரதி விலை அணா 0—1—6.
Reg. No. M. 3066. 1937-ஏப்ரல் 1.
PAHUTHARIVU ("REASON")
மலர் 2. இதழ் 12.



பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

——(○)——

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 2. } ஈரோடு 1937. ஏப்ரல் 1. { இதழ் 12.

மதக்கொடுமை.

(தோழர் ஏ. எல். எம். தமீம்)

(கந்தா காருண்யனே என்ற மெட்டு)

பல்லவி.

கொடுமை, மதக்கொடுமை கூறமிகக்கடுமை (கொ)

அநுபல்லவி.

(1) மடமையே குடிகொண்ட மத
மௌட்டீகர்களின் வஞ்சத்தால்
கடுமையாகவே ஏழைகள் மிகக்
கஷ்டப்படுகின்றார் பஞ்சத்தால்
பல்லவி யெடுப்பு.

அடிமை, அடிமைத்தனம் இதுமடமைத்தனம் (கொ)

(2) கொஞ்சமேனும் கருணையற்ற
கொடிய மதங்களின் தொல்லையால்
சஞ்சலப்படும் மாந்தர்கள் துயர்
தவிர்த்திடுவதற்கில்லையே.

ROJA MUTHIAH.
47, HOSPITAL ROAD
KOTTAIYUR-623 106
P. M. DIST-INDIA

ப—எ.

நெஞ்சம் பதைக்குதையா பஞ்சம் வதைக்குதையா (கொ)

(3) கடவுள் ஒருவரிருந்திடில் அதால்
கவலை நமக்கென் சொல்லுவீர்?
படமுடியாத்துயரத்தால் மக்கள்
பரதவிப்பதேன் வில்லுவீர்.

ப—எ.

கடவுளிருந்தாலன்றோ கவலை தீருமன்றோ? (கொ)

(4) மோசம் போனோமிதுவரையும்
முற்றிலும் மூடபக்தியால்
ஈசனொருவனிருந்திடிலேனோ
இதை யறிந்திடான் சக்தியால்

ப—எ.

கீசமிகுந்த ஆட்சி மோசமான சூழ்ச்சி (கொ)

(5) மதங்களை விளம்பரஞ் செய்யும்
வைதீகர் ஆவேசத்தால்
நிதந்தவறாது உலகில்
நிகழ்ந்திடும் பெரும் யுத்தத்தால்

ப—எ.

சதமின்றிவாடி தவிக்கின்றார் கோடி (கொ)

(6) போரில் மாண்டவர் எத்தனைகோடி
பொல்லாத மதவெறியினால்
பாரில்தமீம் பாடினேனிதைப்
பார்ப்பீரே பகுத்தறிவினால்

ப—எ.

கேரில்காணும் கோலம் நியாயமற்றகாலம் (கொ)

சீர்திருத்த மார்க்கம்.

(இங்கர்சால்)

VII.

கல்விப் பயிற்சி.

ஒவ்வொரு குழந்தையும் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் சக்தி பெறுமாறு கல்வி புகட்ட வேண்டும். எவரும் பிறருக்குப் பாரமாயிருக்கக் கூடாதென்று ஒவ்வொரு குழந்தைக்கும்போதனை செய்யவேண்டும்.

உலகத்துக்கு உபயோகமானவர்களே கண்ணியமுடையவர்கள் என்றும், பிறர் உழைப்பால் உயிர் வாழ்கிறவர்கள் சமூகத்துரோகிகள் என்றும் ஒவ்வொரு குழந்தைக்கும் போதனை செய்ய வேண்டும். பிரயோஜனகரமான வேலையே பிரார்த்தனை என்றும், புத்திசாலித்தனமாகப் செய்யப்பட்ட ஒவ்வொரு வேலையும் மேலான தெய்வ வணக்கமென்றும் ஒவ்வொரு குழந்தைக்கும் அறிவுறுத்த வேண்டும்.

சுயமாகச் சிந்தனை செய்யவும் ஆராய்ச்சி செய்யவும் பகுத்தறிவிலும் ஆழ்ந்த நோக்கத்திலும் அனுபவத்திலும் நம்பிக்கை வைக்கவும் ஒவ்வொரு குழந்தைக்கும் கற்பிக்க வேண்டும்; அவ்வாறு செய்வதே பிரயோஜனகரமான வேலையென்றும் வற்புறுத்தவேண்டும். கருவிகளை உபயோகிக்கவும் கைகளை உபயோகிக்கவும் பொருள் உற்பத்தியில் சிந்தனை செலுத்தவும் குழந்தைகளைத்தூண்ட வேண்டும். பயனில்லாத விஷயங்களைப்படித்து அவர்களுடைய வாழ்நாள் பாழ்படுதல்கூடாது. வழக்கொழிந்தபாஷைகளைக் கற்க அதிக காலம்செலவு செய்யக்கூடாது. சரித்திரப் பயிற்சியிலும் வீண் காலம் போக்கக்கூடாது. ஏனெனில் சரித்திரங்கள் பெரும் பாலும் பொய்க்கதைகளே. பெரும்போர் நிகழ்ந்த ஆண்டு மாதம், தேதிகளையும் மன்னர்கள் பிறந்த ஆண்டு, மாதம்

தேதிகளையும் மனப்பாடம் பண்ணுவதிலும் காலத்தை வீணாக்கக்கூடாது. சரித்திரங்களின் தத்துவங்களையும் தேசங்களின் உற்பத்தி வரலாறுகளையும் தத்துவ ஞானக் கொள்கைகளையும் இவை யாவற்றிற்கும் மேலாக விஞ்ஞான சாஸ்திரங்களையும் அவர்களுக்குப் போதனை செய்ய வேண்டும்.

பண விஷயங்களில் மட்டுமன்றி மானசீக விஷயங்களிலும் சத்தியமாக இருக்க வேண்டுமென்றும், அந்தரங்க சுத்தியோடு இருக்க வேண்டுமென்றும் தன் உண்மையான அபிப்பிராயங்களைத் தைரியமாக வெளியிட வேண்டுமென்றும் குழந்தைகளுக்குப் போதனை செய்யவேண்டும். குழந்தைகள் சத்தியவாதிகளாக இருக்க வேண்டுமானால், பெற்றோரும் சத்தியவாதிகளாக இருக்க வேண்டும்; பாசாங்குக்காரர் குழந்தைகளும் பாசாங்குடையவைகளாகவே இருக்கும். பெரும்பாலோர் அபிப்பிராயங்களை ஒப்புக்கொள்ளும் பெற்றோர்கள்—மனத்தில் ஒன்றை நினைத்து வெளியில் ஒன்றைக் கூறும் பெற்றோர்கள், தம் குழந்தைகள் அந்தரங்க சுத்தியுடையவைகளாக இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கவே கூடாது.

ஆசிரியர்களுக்குத் தெரியாத விஷயங்களை ஆசிரியர்கள் போதனை செய்யவே கூடாது. நம்பிக்கைகளையும் மூடபக்திகளையும் கொள்கைகளையும் நுசுப்படுத்தப்பட்ட விஷயங்களாகப் பாவனை செய்யவே கூடாது. எதையும் திடீரென நம்பக் கூடாதென்றும் ஆராய்ச்சி செய்து உண்மையை உணர வேண்டுமென்றும் குழந்தைகளுக்கு அறிவுறுத்த வேண்டும். அமித நம்பிக்கையை விட அமிதமான சந்தேகம் மேலானது. எனவே சுயமாகச் சிந்தனை செய்து சுயமாக உணர்ந்து உண்மைகளைச் சுயமாக அறிய வேண்டுமென்று குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டும்.

எதிர்காலத்துக்கு உறுதியளிக்கக் கூடியது உண்மையான கல்வியே. மூளை வளர்ச்சியும் ஹிருதய நாகரிகமும் வறுமையையும் குற்றங்களையும் உலகத்திலிருந்து ஓட்டிவிடும். பள்ளிக்கூடமே உண்மையான கோவில்; விஞ்ஞான சாஸ்திரமே உண்மையான உலக ரக்ஷகர். கல்வி—மெய்க் கல்வி, சத்தியம், ஒழுக்கம், ஒறுப்பு இவைகளின் தோழன்.

சட்டங்களினால் மக்களை ஞானிகளாக்க முடியாது; நல்லவர்களாக்க முடியாது; மக்களை தப்பு வழியில் செல்லாமல் தடுத்து நிறுத்தி உத்தமராக்கவும் முடியாது. மக்களை மயக்கக்கூடியவைகள் உலகத்தில் ஏராளமாக இருக்கின்றன. உயிருள்ளவர்கள் எல்லாம் மயக்கத்துக்கு ஆளாகக்கூடியவர்களே. மயக்கத்துக்கு உள்ளாகாதவாறு ஒதுங்கி நிற்க வேண்டுமென்று மக்களுக்குப் போதனை செய்வது மேலான போதனையாகாது; மயக்கந்தருவனவற்றை எதிர்த்து நிற்குமாறு போதனை செய்து சக்தியை விருத்தி செய்வதே மேலானது. சட்டங்களினால் எதுவுமே செய்யமுடியாது; எடுத்ததற்கெல்லாம் சட்டமியற்றுவது தனி நபர் சுதந்தரத்தை அழிப்பதாகும். மிதபோகத்துக்காகவும் ஒழுக்கத்துக்காகவும் மற்றும் பலவற்றிற்காகவும் சுதந்தரத்தைக் கொலை செய்யவே கூடாது. மற்றவை யாவற்றையும்விட சுதந்தரம் மிகவும் முக்கியமானது. எனினும் களைகள் வளராமல் தடுப்பதற்காக சூரியனையே ஒழித்துவிடவேண்டுமென்று சிலர் கூறுகிறார்கள். உயிருக்கு சூரியன் உறுதியளிப்பதுபோல எல்லா ஒழுக்கங்களுக்கும் சுதந்திரம் உறுதியளிக்கிறது. சுதந்தரத்தை இழப்பதைவிட மக்கள் பழையபடி காட்டாளர் ஆவதேமேல். முன்னேற்றத்துக்கு சுதந்தரமே உயிர்; அதுவே வித்து; அதுவே உரம்; அதுவே வெப்பம்; அதுவே மழை; அதுவே காதல்; அதுவே இன்பம்.

எனவே, சந்தோஷமாக இருப்பதும் பிறர் க்ஷேமத்துக்கு உதவி புரிவதுமே ஒரு மனிதன் விரும்பக்கூடிய மேலான பதவியென்றும், வாழ்க்கை வெற்றிக்கும் உத்தியோகமும் அதிகாரமும் தேவையில்லையென்றும், அதிக நிதி சேர்க்க விரும்புவது ஒரு மாதிரி பைத்தியமென்றும் எல்லாருக்கும் போதனை செய்யவேண்டும். உனக்குத் தேவையில்லாததும் உனக்கோ பிறருக்கோ நன்மையுண்டாகும்படி உபயோகியாததுமானவைகளைத் தேடுவது உன் சக்தியை வீணாக்குவதாகும்; உன் சிந்தனையை துர்வினியோகம் செய்வதாகும்.

உலகத்திலே அதிக மகிழ்ச்சியுடைவர்களாக இருப்பவர் பிச்சைக்காரர்களுமல்ல, கோடீசுரர்களுமல்ல. கீழ் நிலையிலிருப்பவன் மேலேறப் பார்க்கிறான்; மேல் நிலையிலிருப்பவன் கீழே விழுந்து விடுவோமோ என்று அஞ்சுகிறான். ஒருவன் கேட்கிறான்; மற்றவன் மறுக்கிறான்; அடிக்கடி மறுப்பினால் நெஞ்சு கல்லாகிறது; போராசை

மேலீட்டினால் தன்னிடமுள்ளதை இறுகப் பிடித்துக்கொள்ள கை முயல்கிறது.

தம் ஆஸ்தியை அடக்கியாளத் தேவையான அறிவும் பெருந்தன்மையும் மிகச் சிலருக்கே இருக்கிறது. பொதுவாக ஆஸ்தியே சீமான்களை அடக்கியாளுகிறது. பணமே அவர்களது எஜமான்; பணத்துக்காக அவர்கள் அடிமைகள் போல் உழைக்கிறார்கள். ஒரு கல்ல தொழிலும் போதுமான வருமானமும் எதிர்காலத்துக்குக் கொஞ்சம் மீத்துவைக்க வசதியும், தன் குழந்தைகளுக்கு கல்வி புகட்ட அறிவும் தன் சுற்றத்தார் வறுமைப்படாமல் உதவி புரியக் கருணையும் உடையவனே உண்மையான மகிழ்ச்சியுடையவன்.

ஜனசமூகம் சீமானுக்கு அடி பணிந்து தலைவணங்குகிறது. செல்வத்தினால் அதிகாரமுண்டாகிறது. சீமானுக்கு எல்லோரும் முகஸ்துதி கூறுகிறார்கள்; புகழ் மாலை பாடுகிறார்கள். எனவே லக்ஷோபி லக்ஷம் பேர் செல்வத்தேட தமது சக்தி முழுமையையும் பிரயோகம் செய்கிறார்கள்; ஆத்மாவையுங்கூடத் தியாகம் செய்கிறார்கள். ஒருவனது யோக்கியதைகளையும் குணாகுணங்களையும் பாராமல் அவனது பணத்துக்காக உலகம் மதிப்புக் கொடுக்கும்வரை, புகழ் பாடும் வரை இந்தப் பைத்தியகாரப் பணந்தேடும் முயற்சி நடந்து கொண்டுதானிருக்கும்.

சீமான்கள் யோக்கியதைகளை நிதானம் செய்யும்போது இரண்டு விஷயங்களை நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். "செல்வம் அவர்களுக்கு எப்படிக் கிடைத்தது? அதை அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்? அது நியாயமாகச் சம்பாதிக்கப்பட்டதா? மனித சமூகத்தின் நன்மைக்காக அது உபயோகிக்கப்படுகிறதா?" என்பன போன்ற விஷயங்களை நாம் முக்கியமாக ஆராய வேண்டும். ஜனங்கள் உண்மையான அறிவாளிகளாகும்போது, மூளை சரியாக விருத்தியடையும்போது, தமக்குத் தேவையில்லாததை—தம்மால் புத்திசாலித்தனமாக உபயோகிக்க முடியாததைத் தேட மக்கள் முயற்சி செய்யவே மாட்டார்கள். லக்ஷக்கணக்கான மக்கள் உண்ண உணவும் உடுக்கத் துணியுமில்லாமலாகும் போது உண்மையான அறிவாளிக்கு சந்தோஷமாகவும் திருப்தியாகவும் வாழமுடியாத ஒரு காலம் வரத்தான் போகிறது; எல்லா ஹிருதயங்களிலும் புனிதமான கருணை

தோன்றும் காலம் வரத்தான் போகிறது; உண்மையை ஆராய்ந்தறியவும் மகிழ்ச்சிக்குரிய காரணங்களை விசாரணை செய்யவும், காரணங்களையறிந்து அவைகளின்படி வாழ்க்கை நடத்தவும் மக்கள் முன் வருங்காலம்வரத்தான்போகிறது; மக்கள் எல்லாம் அறிவு விளக்கம் பெற்று சுகமாக வாழப் போகும் காலம் வரத்தான் போகிறது.

தாபங்களை அறிவு அடக்கியாளும்போது, பகுத்தறிவு அரியாசனமேறி அரசு செலுத்தும்போது துர்க்குணங்கள் புரட்சி செய்யாதாகும்போது தான் மனிதன் உண்மையான நாகரிகமடைவான்.

உலகத்தை நாகரிகப்படுத்த—பொன்னுலக வாழ்க்கையை உலகத்தில் நிலைநாட்ட நாம் குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட வேண்டும்; அந்தக் கல்விப்பயிற்சி தொட்டிலிலேயே, தாயின் மடியிலேயே ஆரம்பமாக வேண்டும்.

VIII.

உழைத்து விட்டுக் காத்திருப்போமாக.

நான் மேலே கூறிய சீர்திருத்தங்கள் ஒரே காளில் அமலில் வரக்கூடியவைகளல்ல; ஒரு கால் அமலில் வர ஒரு நூற்றாண்டுகாலம் பிடிக்கலாம். அந்த நிலையில் எண்ணற்ற குற்றங்கள் செய்யப்படலாம்; அதிக வறுமை தோன்றலாம்; எனவே நாம் ஏதாவது செய்து தீர வேண்டும்.

ஒவ்வொருவனும் தன் சுய முயற்சியினால் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும் நிலைமையை அடைய வேண்டும்; மறு நாளைப்பற்றி ஒவ்வொருவனும் புத்திசாலித் தனமாக யோசனை செய்ய வேண்டும். சொந்தச் செலவு போக ஏதாவது மீதம் ஏற்பட்டால் அதில் ஒரு பகுதியை அவன் ஏழை எளியோருக்கு உதவட்டும்; ஒவ்வொருவனும் தனக்குச் சாத்தியமான வரை பிறருக்கு உதவி புரியட்டும்; வீழ்ச்சியடைந்தவனுக்கு ஆதரவளிக்கட்டும்; முன்னேற முயல்பவனுக்குக் கைகொடுக்கட்டும்; சோம்பேறிகளுக்கு வேலை கொடுக்கட்டும்; எல்லாரோடும் நல்ல வார்த்தை சொல்லட்டும்; நற்புத்தி புகட்டட்டும்; மகிழ்ச்சி யூட்டட்டும். அதாவது ஒவ்வொரு மனிதனும் தன்னாலான நன்மைகள்

எல்லாம் பிறருக்குச் செய்யட்டும்; பிறர் மனப்புண்ணை ஆற்றட்டும்; ஒரு நல்ல நாள் உதயமாவதற்குத் தன்னாலான முயற்சிகள் எல்லாம் செய்யட்டும்.

என் அபிப்பிராயத்தில், இதுவே நன்மையான மேலான மதம். தன்னாலான நன்மைகளையெல்லாம் பிறருக்குச் செய்பவனே உண்மையான ஞானி—அவதாரபுருஷன்—தெய்வதூதன். தன்னாலான நன்மைகளை யெல்லாம் பிறருக்குச் செய்வதே உண்மையான ஆத்ம ஞானம்; சமய ஞானம். துன்பப்பட்டவர்களுக்கு உதவி செய்வதும் சோர்வடைந்தவர்கள் உள்ளத்து நம்பிக்கையை உண்டு பண்ணுவதும் மிகவும் புனிதமான செயல். இதுதான் விஞ்ஞான மதம். பழைய மதங்கள் எல்லாம் மிகக் குறுகியவை; தற்கால உலகத்துக்கு அவை பொருத்தமானவைகளல்ல. பழைய மதக் கொள்கைகளில் உயிருமில்லை; கனிவுமில்லை. அவை குரூரமானவை; கருணையற்றவை; காட்டாளத்தன்மையுடையவை. நாம் மேன்மைக் குணம் படைத்தவர்களாகி வருகிறோம்; பெருந்தன்மை வாய்ந்தவர்கள் ஆக உருமாறி வருகிறோம்.

சூரியர்கள் பதித்த வான மண்டலமே உண்மையான திருக்கோயில். இயற்கை ரகசியங்களை எடுத்துக் கூறுவோரே உண்மையான மதாச்சாரியர்கள். விஞ்ஞான மதத்தில் அறிவாளிகள் கூறிய உண்மைகள் எல்லாம் மலிந்து கிடக்கின்றன. விஞ்ஞானப் பிரார்த்தனா முறைகளிலே ஆத்மாவின் அபிலாஷைகள் எல்லாம் அடங்கியிருக்கின்றன; ஆனந்தமும் நம்பிக்கையும் உத்தம வாழ்வின் லக்ஷணங்களும் நிறைந்திருக்கின்றன. ஆகவே விஞ்ஞான மதப்படி நாம் நடப்போமாக.

"அறியாமையைத்தவிர வேறு இருளே இல்லை." எனவே உலகமுழுதும் நாம் அறிவுச் சோதியை நிரப்புவோமாக.

ஆஸ்திகமும், நாஸ்திகமும்.

அர்ச்சனையும்வேண்டுதலையும்நாயைத்தீர்க்கா.

(சார்லஸ் பிராட்லா)

நாஸ்திகம் ஒழுக்கயீனத்தை ஆதரிப்பதாகவும், நாஸ்திகர்களுடைய நடத்தை இழிவானதாக இருப்பதாகவும், அவர்களுடைய தீமையான வாழ்க்கை மீது நியாயமான கோபங் கொண்டுள்ள ஒரு தெய்வத்தை நிந்திக்கவே அவர்கள் நாஸ்திகக்கொள்கைகள் கொண்டுள்ளதாகவும் பக்த சிரோன்மணிகள் சொல்வது ஒரு ஆசாரமாகிவிட்டது. கெட்ட வழிகளில் பழகுவது, இழிகுணமுடைய நட்பு—கட்டுக்கடங்காத வாழ்க்கை—இவையும், இவை போன்றவையுந்தான் ஒரு மனிதனை நாஸ்திகனாக்கி விடுவதாக அவர்கள் கருதுகிறார்கள்.

"அனேகமாக எல்லா நாஸ்திகர்களும் மிகமிக மோசமான இழிவான வாழ்க்கையை நடத்தியவர்களாகக் காணப்படுகின்றனர்" என்று கூட தமது 'கிறிஸ்தவ மத போதனை' என்ற நூலில் டாக்டர் ஜான்பை ஸ்மித் என்பார் எழுதியிருக்கிறார்.

ஆஸ்திகத்தை அடிப்படையாகக் கொண்ட எந்த முறையையும் விடக்கூடுதலாகவே, மனிதர்கள் இன்பவாழ்வுபெற, நாஸ்திகத்தில் சந்தர்ப்பமிருக்கின்றதென்று நான் வலியுறுத்துகின்றேன். தெய்வ நம்பிக்கையுடையவர்களை விட உண்மையான நாஸ்திகர்களுடைய வாழ்வு ஒழுக்கத்தில் சிறந்ததாக இருத்தல் வேண்டும். ஆஸ்திகனுக்கு மட்டும் நாஸ்திகம் மிகக் கடுமையான குற்றமாகத் தோற்றுகிறது.

நாஸ்திகம் எது?

வெறும் அவநம்பிக்கை மட்டும் நாஸ்திகமல்ல; சரியாக உணர்பவர்கள் இதை அறிவர். இல்லையென்று சொல்வது மட்டும் நாஸ்திகமன்று. ஆனால் மனப்பூர்வமாக உண்மைகள் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு வலியுறுத்துவதே நாஸ்தி

கம். மதத்தின் ஆதரவில் நின்று மார்தட்டிப் பேசும் வைதீகப் பிரசாரகர்களுடைய தூற்றுதலை மட்டும் கேட்டு ஒரு தலைப் பட்சமாகக் கண்டிக்கவேண்டாம். வைதீகப் பிரசாரகர்களை ஒரு பொது மேடைக்கு வாதம் புரியுமாறு அழைத்தால் அவர் களுடைய தைரியம் பலவீனமடைகிறது. நாஸ்திகத்துக்குச் செல்வாக்கில்லை யென்று கருதுவது வழக்கம். இந்த வழக் கத்தைக் கொண்டும் அதைப்பற்றித் தப்பபிப்பிராயங்கொள்ள வேண்டாம். 'கடவுள் இல்லை' என்று நாஸ்திகர் கூறவில்லை. ஆனால் "கடவுள் என்பதற்கு நீங்கள் என்ன அர்த்தங்கொள்கி றீர்கள் என எனக்குத் தெரியவில்லை; கடவுளைப்பற்றி எனக்கு ஒன்றுந் தெரியவில்லை. கடவுள் என்றசொல் எனக்கு எந்த விதமான பொருளையும் தெளிவுபடுத்தவில்லை. என் புத்திக்கு எட்டாதவொன்றையும், அது உண்டு என்று சொல்பவராலும் விவரித்துக்கூற முடியாதவொன்றையும், இல்லை என்று சொல்ல முடியாதகாரணபால், நான் கடவுளில்லை என்று மறுக்க வில்லை. எனக்குப் புலனாகிற இந்த வாழ்க்கைக்குப் புறம்பாக வுள்ள ஒரு ஜீவிதமே கடவுள் என்று சொன்னால் அத்தகைய கடவுள் இல்லை என்றும், இருக்க முடியாதென்றும் நான் வலியுறுத்துகிறேன்" என்று நாஸ்திகன் கூறுகின்றான். வேதா ந்தியுங்கூட இந்த பிரபஞ்சமே கடவுள் என்றும், இதைத்தவிர வேறு இல்லை என்றும் சொல்லுகிறான்.

சடப் பொருள்களாலாயதென்று சொல்லப்படுகிற இந்தப் பிரபஞ்சத்துக்குப் புறம்பாக இதற்குச் சம்பந்தமில்லாத தனித்த ஒரு பொருளிருக்கின்றதென்றும், அதுவே கடவுளென்றும், அது புருடத்துவம், சர்வவியாபகம், சர்வசக்தி, நித்தியவாழ்வு எல்லையற்ற தன்மை, மாறாத இயல்பு, பரிபூரண நற்குணம் முதலிய விசேஷ குணங்கள் உடைய தென்றும் ஆஸ்திகர் வலி யுறுத்துகின்றனர். ஆஸ்திகரின் இக்கூற்று முன்னுக்குப்பின் முரணாகவும், தினசரி அனுபவத்துக்கு மாறுபாடாகவுமிருப்ப தால், 'அத்தகைய பொருள் எதுவுமில்லை' என்று நாஸ்திகன் பதிலிறுக்கின்றான்.

ஆக்கலும், அழித்தலும்.

கடவுள் படைக்கின்றார் என்று சொன்னால், படைக்கி றது என்பதே நடவாத காரியம் என நாஸ்திகன் மறுக்கின் றான். படைத்தல் என்பதும் அழித்தல் என்பதும் ஒரு தோற் றத்தைக் குறித்து மட்டும் பொருந்துமேயன்றி வேறல்ல. ஒரு

காரணமாக இருக்கும் நிலைமையைத்தான் அழிக்கலாமேயொழிய பொருளை அழிக்க முடியாது. ஆக்கலும், அழித்தலும், ஒரு தோற்றத்திலிருந்து மற்றொரு தோற்றமாக மாறுவதைக் குறிக்கின்றனவேயன்றி, ஒரு பொருள் உண்டாவதையோ அழிவதையோ குறிக்கவில்லை. உலகத்தை கடவுள் சிருஷ்டித்தார் என்று சொன்னால் அதை அவர் தம்மிடமிருந்துண்டு பண்ணியிருக்க வேண்டும்; அல்லது ஒன்றுமில்லாததிலிருந்து அதை உற்பத்தி செய்திருக்கவேண்டும். ஆனால், கடவுளிடமிருந்து உலகம்உண்டானதாக ஆஸ்திகர்ஒப்புக்கொள்ளமாட்டார்கள்; அவ்வாறுஒப்புக்கொண்டால் கடவுளே உலகம் என்றாய்விடும்;பொருள்களுக்குள் வேறுபாடில்லை; எனவே உற்பத்திக்கிடமில்லை. ஒன்றுமில்லாததிலிருந்து உலகத்தைக் கடவுள் சிருஷ்டித்தார் என்றால் அதுவும் பொருந்தாது. என்றும் அழியாத கடவுள் எல்லையற்றவராயிருப்பதால், உலகம் உண்டாவதற்கு முன் அது தற்பொழுது அடைத்துக்கொண்டிருக்கும் இடம் அதற்குமுன் காலியாக இருந்தது என்று கருதுவதற்கில்லையல்லவா? உலகம் எப்பொழுது தோன்றிய தென்றும் ஆஸ்திகரால் சொல்ல முடியாது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் அது சிருஷ்டிக்கப்பட்டிருந்தால் உலகம் இல்லாத காலமும் ஒன்று இருந்திருக்கவேண்டும்; உலகத்திற்கு ஒரு முடிவு உண்டென்றால் அது அழிந்த பிறகும் ஒரு காலம் உண்டல்லவா? உலகம் தோன்றுவதற்கு முன் எதாவதொன்று இருந்திருக்கவேண்டும்; எனென்றால் ஒன்றுமில்லாததிலிருந்து எதுவும் உண்டாக முடியாது. இந்த வஸ்து எல்லையுள்ளதாகவோ, எல்லையற்றதாகவோ இருக்கவேண்டும்; எல்லையுள்ளதானால் கடவுளல்ல; எல்லையற்றதானால் சிருஷ்டி என்பது நடவாத காரியம்; எல்லையற்ற வஸ்துவுடன் இன்னொன்றைச் சேர்க்க முடியாதல்லவா?

காத்தல்

பிரபஞ்ச சிருஷ்டியை விட்டு உலகப் பராமரிப்புக்கு வருவோம். இங்கும் ஆஸ்திகத்துக்கு அதிக இடையூறுகள் இல்லாமற் போகவில்லை. தீமை, துன்பம், வறுமை, குற்றம் முதலியன ஆஸ்திகரை எதிர்க்கின்றன. சர்வ நன்மையும், சர்வ அறிவும், சர்வ சக்தியும் உடைய கடவுளின் பராமரிப்பில் இவை எவ்வாறு இருக்க முடியும் என்ற கேள்வி எழுகின்றது. ஒன்றில், தீமையும் கடவுளாலேயே படைக்கப்பட்டிருக்கவேண்டும்; அல்லது அது சுயேச்சையாக இருந்து வரவேண்டும். கடவுள் தீமையை உண்டுபண்ணியிருக்கமுடியாது. சர்வ

கன்மையைச் சேர்ந்தவரல்லவா கடவுள்? கடவுளுக்கு எதிரிடையாக அது இருந்துவரவும் முடியாது; என்? அப்படியானால் கடவுள் எவ்வாறு சர்வவல்லவராக இருக்கமுடியும்? தீமைக்கும் ஒரு உற்பத்திகாலம் ஏற்பட்டிருக்கவேண்டும்; இன்றல் கடவுளைப்போல அதுவும் என்றுமழியாததாக இருக்கவேண்டும். கடவுள் ஒருவர்தானே என்றுமழியாதவர்? கடவுளிடத்திலிருந்து உற்பத்தியாகவிட்டால் கடவுளுக்குப் புறம்பாக அது தோன்றியிருக்கவேண்டும். எல்லையற்ற கடவுளுக்குப் புறம்பாக ஒன்றுகிடையாது; ஆகையால் தீமை கடவுளுக்குப் புறம்பாகவும் முளைத்திருக்க முடியாது.

நாஸ்திகர் கொள்கை இதுவல்ல. தீமைகள் ஒவ்வொன்றும் காரணத்தால் ஏற்படுங் காரியமே. கடவுளோ சைதானோ இதன் காரணமல்ல. உலக வாழ்க்கை முறைகளை நன்குணர்ந்து நடப்பதால் இத் தீமைகளை ஒழிக்க முடியுமென்றும் இவை மீண்டும் தோன்றாதவாறு தடுக்க முடியுமென்றும் நாஸ்திகன் உறுதி கூறுகின்றான்.

நரகபயம் அவசியமா?

குற்றங்களைத் தடுக்கக் கடவுள் நம்பிக்கை அவசியமெனச் சிலர் கூறுகிறார்கள். எதிர்காலத்தில் துன்பம் நேரிடுமென்ற பயம் நாஸ்திகனுக்கு இல்லாமற் போய்விடுமாதலால் அவன் கொலை, களவு, பொய் முதலிய குற்றங்களைச் செய்யலாம் என்பது அவர்களது வாதம். ஆஸ்திகர்கள் எப்பொழுதாவது திருடுகிறார்களா? பொய் சொல்லுகிறார்களா? ஆம் என்றால் கடவுள் நம்பிக்கையும், குற்றஞ் செய்வதைத் தண்டிக்கும் கடவுள் சக்தியும் இக்குற்றங்களைத் தடுக்கப் போதுமானவையல்ல என்றுதானே ஆகிறது? உலகிலுள்ள சகல மனிதர்களும் பற்பல வழிகளில் இன்பத்தை அடைய முயல்கிறார்களென்பதையும், மூடர்களும் துர்ப்போதனைக்குட்பட்டவர்களும் சரியான வழியை விட்டுத் தப்பான வழிகளிற்சென்று குற்றங்களைச் செய்கிறார்களென்பதையும் இந்த ஆஸ்திகர்கள் கவனிப்பதில்லை. எனவே மனித வாழ்க்கை இன்பகரமாக இருப்பதற்குரிய வழியை மனித சமூகத்துக்குப் போதிப்பதினால் குற்றங்களையும், பிழைகளையும் குறைக்க முடியுமென நாஸ்திகர்கள் கருதுகிறார்கள். ஒவ்வொரு மனிதனும் ஒழுக்கமாக நடக்கவேண்டுமென நாஸ்திகர்கள் போதிப்பது, மெல்ல மெல்ல ஒரு காலத்தில் கடவுள் இதற்குத் தக்க பரிசளிப்பாரென்று ஆசை வார்த்தை காட்டியல்ல; ஆனால் நல்ல செய்கை செய்த

வனுக்கும், அவனைச்சுற்றி வாழ்பவருக்கும் கைமேற்பலனளிக்கின்றது என்பதனால்தான். கொலை, களவு, பொய் ஆகிய குற்றங்களைச் செய்யாது மனிதனை நாஸ்திகம் பாதுகாப்பது, மரணத்துக்குப் பிறகு ஏற்படும் சிட்சை பயத்தாலல்ல; ஆனால் இக்குற்றங்கள் இவ்வுலக வாழ்க்கையையே துன்பமயமாக்குவதால்தான.

இப்பிரபஞ்சத்தின் கர்த்தாவும், அதைப் பரிபாலிப்பவரும் கடவுள் என ஆஸ்திகம் கூறுகின்றது; அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதும் ஆஸ்திக சித்தாந்தம்; இதனால் மனிதர்களுடைய சுயமுயற்சியில் அவநம்பிக்கை கொள்ள இடமேற்பட்டு அதைத் தடுத்து இடையூறு செய்கின்றது. ஆனால் நாஸ்திகர் கொள்கை மனிதனுடைய சகலவிதமான முயற்சிகளுக்கும் தாராளமாக இடமளித்து, வாழ்க்கையை அதி உன்னதமான நிலைக்குக் கொண்டுவர வசதியளிக்கின்றது. ஆஸ்திகர் கொள்கைப்படி பரம துஷ்டனாக இருப்பவனும் மரணத் தறுவாயில் தனது தீய செயல்களுக்காக வருந்துவானாயின் அவனுக்கு மரணத்துக்குப் பின் இன்பவாழ்வு சித்திக்கும். இவ்வுலகில் நல்வாழ்க்கை வாழ்பவனுக்கு இங்கேயே இன்பம் கிடைக்கின்றதென்றும் இன்னொரு சமயம் அவன் பச்சாதாபப்படவேண்டிய காரணம் ஏற்படாதென்றும் நாஸ்திகம் உறுதி கூறுகின்றது.

தெய்வநம்பிக்கை உணவளிக்குமா?

மக்களுக்கு ஆரோக்கியத்தையும், நோயையும் அளிப்பது கடவுள்தானென்றும், தெய்வ கோபத்தால் ஏற்படுவதால் நோய்களை மனச் சமாதானத்துடன் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்றும், ஆஸ்திகம் நம்புகின்றது; உடற்கூற்று சாஸ்திரத்தை அறிவதால் ஆரோக்கிய வழிகளைப் பின்பற்றி நோய்களினின்றும், தற்காத்துக்கொள்ள முடியுமென்றும் போதிய காற்று வசதியில்லாத வீடுகளிலும், தொழிற்சாலைகளிலும் வசிப்பதாலும் மோசமான ஆகாரத்தை உட்கொள்வதாலும் அளவுமீறிய உழைப்பினாலும் மனோவேதனையாலும் இவை போன்றவையாலுமேயன்றி தெய்வ கோபத்தால் நோய் ஏற்படுவதில்லையென்றும், இவற்றிற்கெல்லாம் ஆணிவேர் வறுமையே என்றும், குற்றங்களும் நோய்களும் வறுமையிலிருந்தே முக்கியமாக உற்பத்தியாகின்றனவென்றும் நாஸ்திகம் கூறுகின்றது. மேலும் அர்ச்சனையும் வேண்டுதலையும் நோயைத் தடுக்கா; ஒரு மனிதனுக்கு ஆகாரங் கிடைக்காவிட்டால் அவன் நாஸ்திக

னாயினும் ஆஸ்திகனாயினும் பட்டினியால் வருந்துவது நிச்சயம்; தெய்வ நம்பிக்கை அவனுக்கு உணவளிக்காது.

'கடவுள்' தோன்றிய வரலாறு.

கடவுள் என்ற சொல் என்ன பொருள் கொடுக்கிறது என்பதை ஆராய்வது அவசியமாகின்றது. பிரபஞ்சத்திலுள்ள பொருள்களுக்கு சக்தியளிக்கும் அழிவற்ற பெருஞ் சக்தியைக் குறிக்கத்தான் 'கடவுள்' என்ற சொல் உபயோகிக்கப்படுவதாக ஒருவர் கூறுகிறார். இயற்கையில் மறைந்து கிடக்கும் சக்தியே கடவுள்; அல்லது நீளம், விதி, உயரமில்லாத ஒரு புள்ளியே கடவுள் என மற்றொருவர் கருதுகிறார். மனித சக்திக்கெட்டாத செயல்களை மனிதனைப்போன்ற ஆனால் மனிதனைவிட மேலான, பார்க்கவியலாத ஒரு ஜீவனுடைய செயல்கள் என பழையகாலத்து மனிதன் கருதியிருக்கவேண்டும்" என ஒரு ஆசிரியர் கூறுகிறார். தனித்தனியான சம்பவங்களைத் தனித்தனி பொருள் (கடவுள்)களுடைய செய்கையாகவுங் கருதினார். இதிலிருந்தே கடற் கடவுளும், போர்த்தெய்வமும், காதற்கடவுளும், மழைக்கடவுளும் தோன்றினார்கள். மனிதனுடைய அறிவு வளரவளர இக்கொள்கையும் மாறுபடலாயிற்று. விஞ்ஞானத்தின் முன்பு பட்டொழிந்த கடவுள்கள் பல. முன் அறியாமையும் மூடநம்பிக்கையும் எழுப்பியிருந்த கோயில்களிலிருந்த தெய்வங்கள் விஞ்ஞானத்தால் வெளியில் பிடித்துத் தள்ளப்பட்டன. கடவுள் வாக்கைச் சொல்வதாகக் கருதப்பட்ட கோவில் குருக்களும், மனிதனுடைய விஞ்ஞான அறிவு வளரவளர தனது செல்வாக்கை இழந்து வந்தான். அறியாமையால், பல நூற்றாண்டுகளாக தேவ குருக்களுக்கு அடிமைப்பட்டு, அவர் வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசாது கேட்டு வந்த மனிதன் மதக்கட்டளையைப்புறக்கணித்து, தனது சுய அனுபவத்தை உபயோகப்படுத்தி ஒவ்வொரு காரியத்தையும் பரிசீலனை செய்ய ஆரம்பித்தான். ஆகவே, இன்றைய தினம் மூட நம்பிக்கையின் பழைய படைகளில் எஞ்சி நிற்கும் மூலபலத்தை வளர்ந்துவரும் பகுத்தறிவு எதிர்க்கிறது. இந்தப் போரில் உண்மை வெளிப்படுவதால் மனித சமூகத்துக்குப் பெருத்த நன்மையுண்டு.

கடவுள் உண்டா?

'கடவுள்' என்ற வாக்கு ஆஸ்திகனுக்கு எவ்விதமான சாத்தக்கத்தையும் புரியவில்லை. அது எதையும் போதிக்கவோ

விவரிக்கவோ, தெளிவு படுத்தவோ இல்லை. கடவுள் ஒருவர் இருப்பாரானால், அவர் மக்களிடையே தோன்றியுள்ள சந்தேகத்தை நிவர்த்தி செய்திருக்கலாம். சர்வசக்தியுடைய வருக்கு இது மிகவும் எளிதான காரியமே என்பதை ஆஸ்திகர் ஒப்புக்கொண்டு தீரவேண்டியதுதான். அவ்வாறு அவர் செய்ய முடியாதென்றால், அவரை சர்வ வல்லமையுடையவ ரென்றோ அல்லது சர்வமும் அறிந்தவரென்றோ, சொல்ல முடியாது. அதாவது அவர் கடவுளல்ல. மத சம்பந்தமான சந்தேகங்களாலும், வேற்றுமைகளாலும் துன்பமும், சண்டையும் மதக்கொடுமைகளும் பல நூற்றாண்டுகளாக நடந்திருக்கின்றன. ஆகவே அவர் தம்மைப்பற்றி சில சந்தேகங்களை நிச்சயமாக நிவர்த்தித்து மக்களைத் துன்பத்தினின்றும் பாதுகாத்திருக்க வேண்டும். இவ்வாறு செய்ய அவருக்கு விருப்பமில்லை யென்றால் அவர் மிகமிக நல்லவர் என்று சொல்லமுடியாது. அதாவது அவர் கடவுளல்ல. ஆனால் ஏராளமான பேர் சந்தேகமுடையவராகவும், பெரும்பாலான மக்கள் வேறுபட்ட கொள்கைகளை உடையவராகவும், கடவுளுடைய சக்திகளையும், அப்படியொருவர் உண்டா என்பதைப்பற்றியும் பல்ருக்கு சந்தேகமிருப்பதாலும் கடவுளில்லையென்றோ, இருந்தால் அவர் சர்வஅறிவு முடையவரல்லவென்றோ, சர்வசக்தியுடையவரல்ல வென்றோ, அல்லது நல்லவரல்ல வென்றோ தான் முடிவாகும்.

உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் நாஸ்திகவாதியாகவே பிறக்கின்றது. பிறருடைய போதனையினாலும், தயாரிப்பினாலுமே தெய்வ நம்பிக்கை ஏற்படுகிறது. ஒருவனுக்கு எவ்வளவு தூரம் விஞ்ஞான அறிவு குறைவாக இருக்கிறதோ அவ்வளவு அதிகமான கடவுள் நம்பிக்கை ஏற்படுகின்றது. அறியாமை அதிகப்பட அதிகப்பட நம்பிக்கையும் அதிகரிக்கின்றது. ஆஸ்திகனுக்கு அறியாமை அதிகரிக்க அதிகரிக்க அவனுடைய கடவுள்களின் தொகையும் அதிகரிக்கின்றது. கடவுள் நம்பிக்கை விவேகத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. தர்க்க முறைக்குப்பொருந்தாததைவிட ஆஸ்திகம் மோசமானது. அதன் போதனைகள் பிரயோஜனகரமானவையல்ல வென்பது மட்டுமல்ல, தன்னைப்பற்றிக்கூட அதுபோதிப்பதற்கு எதுவுமில்லை. வைதீகத்தைத் தவிர்த்து ஆஸ்திகம் சாரமற்ற, சம்பந்தமில்லாத ஒரு பகற்கனவேயாகும்.

நாகரீகம்.

(ஈ. வெ. ராமசாமி)

"நாகரீகம்" என்கின்ற வார்த்தையின் பொருள் பிடியில் சிக்காத ஒரு விஷயமாகும். ஒவ்வொருவரும் 'நாகரீகம்' என்பதற்கு ஒரு தனிப்பொருள்கூறி வருகிறார்கள். கண்ணோட்டம் என்கிற தலைப்பின் கீழ் குறளில் நாகரீகம் என்கிற வார்த்தை வள்ளுவரால் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறதாக நான் 10, 20 வருஷங்களுக்கு முன்பு பார்த்ததாக ஞாபகம். அது தாக்ஷண்ணியம், அடிமை என்கின்ற பொருளில் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதாகவும் எனக்கு ஞாபகம். நாகரீகம் என்கின்ற வார்த்தைக்கு எந்தக் கருத்தை வைத்துக்கொண்டு பேசினாலும் மக்கள் சமூகம், நடை, உடை, ஆகாரம் மற்றும் எல்லா பாவனைகளிலும் பெரிதும் மாறுபட்டிருக்கிறது. எந்த ஆதாரத்தினால்தான் இவைகள் வேறுபட்டிருக்கிறதென்று கூறமுடியாது. எப்படியோ எல்லாம் மாறுதலில் தான் போய்க்கொண்டிருக்கிறது. நம்முடைய பெண்கள் முன்பு முழங்கைக்குக் கீழும் இரவிக்கை அணிந்து வந்தார்கள். பின்பு மேலேறியது. மறுபடி கீழே இறங்கியது. இப்பொழுது மறுபடியும் மேலேயே போய்க்கொண்டிருக்கிறது. மேல் நாட்டு ஸ்திரீகளும் தெருக்களில் தெருக்கூட்டுவது போன்ற ஆடைகளை முன்பு அணிந்து வந்தார்கள். அந்தக் காலத்தில் துணிகளைத் தூக்கிப் பிடித்துக் கொள்ள பணம் படைத்தவர்கள் ஆட்களை நியமித்துக் கொண்டிருந்தார்கள். அது அக்கால நாகரீகம். இப்பொழுதோ என்றால் ஆடை விஷயத்தில் மேல்நாட்டுப் பெண்களும் சுருக்கிக்கொண்டு விட்டார்கள். அதை நாம் இப்பொழுது நாகரீகமென்றுதான் கருதுகிறோம்.

நாம் இவைகளைப்பற்றி எல்லாம் பேசும் பொழுதும் யோசிக்கும் பொழுதும் எந்தவித பற்றுதலும் இல்லாமல் அதாவது ஜாதி, மதம், தேசம் என்பன போன்ற பற்றுகளை விட்டு விட்டு (Free யாக) சுயேச்சையாகச் சீர்தூக்கிப்பார்த்தால்தான் விஷயங்கள் நன்றாகத்தெரிந்து கொள்ளலாம். அதன் உண்மையும் அப்பொழுதுதான் விளங்கும்.

ஒரு காலத்தில் சாம்பலைப்பூசிக்கொண்டுசிவசிவா என்று ஜெபிப்பது தான் யோக்கியமாகக் கருதப்பட்டது. இன்றைய கால தேச வர்த்தமானங்கள் மேல் சொன்ன விஷயத்தை கேலி செய்கின்றன. புருஷன் பெண்ஜாதி என்கிற இரு சாராரை எடுத்துக்கொண்டாலும், முன்பு கல் என்றாலும், கணவன் புல் என்றாலும் புருஷன் என்று மதித்து அடுப்பூதுவதே தங்கள் கடமையென்று நடந்து வந்த பெண்களைப்பற்றி பெரிதும் மதித்து வந்தார்கள். ஆனால் இன்றோ புருஷனிடம் "நான் உனக்கு வேலைக்காரியா? அடிமைப்பட்டமாடா? ஜாக்கிரதையாயிருந்தால் சரி, இல்லாவிட்டால் எனக்கும் சம அந்தஸ்தும் சம உரிமையும் சர்வ சுதந்திரமும் உண்டு" என்று கர்ஜனை செய்யும் மனைவிமாராகிய பெண்களையே நாகரீகம் வாய்ந்தவர்களென்று கருதுகிறோம்.

முன்பு புராணத்தைப்பற்றியும் மதத்தைப்பற்றியும் பேசுவதுதான் வித்வத்தன்மையாக இருந்தது. ஆனால் அது இன்று குப்பையாகி பரிகசிக்கத் தக்கதாக ஆகிவிட்டது. புத்திக்கும் அறிவிற்கும் பொருத்தமில்லாத மூடட்டுப் பிடிவாதத்தில் முன்பு நம்பிக்கையிருந்ததை சிலாகித்துப் பேசினோம். ஆனால் இன்றைய தினம் பிரத்தியக்ஷமாக எதையும் எடுத்துக்காட்டித் தெளிவு படுத்துவதையும்-விஞ்ஞானம் போன்ற தான அறிவியக்க நூல்களைக் கற்றுணர்ந்த வல்லுநர்களையுமே நாம் பெரிதும் மதித்துவருகின்றோம்.

நாகரீகம் என்பது நிலைமைக்கும்-தேசத்திற்கும்-காலப் போக்கிற்கும் தக்கவாறு விளங்குகிறது. காலதேச வர்த்தமான வழுக்கத்தையே பொட்டி "நாகரீகம்" காணப்படுகிறது.

காலப்போக்கானது எந்த தேக்கத்தையும் உண்டாக்குவதில்லை. ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றவும்-புரட்சி ஏற்படவும் செய்கிறது.

மீசை, தலைமயிர் இவைகளைப் பற்றியும் இப்பொழுது பேசப்படுகின்றது. எது நாகரீகமென்று கருதுகின்றோமோ அது பெருத்த அஜீர்ணத்துக்குவந்துவிடுகிறது. மீண்டும் அந்த நிலைமையானது மாறிக்கொண்டு போகத்தான் செய்கின்றது.

ஒரு விஷயமானது வாய்ச் சாமர்த்தியத்தினால் செலாவணியாகிவிடும். அது மெய்யோ-பொய்யோ, சரியோ-தப்போ எப்படியும் இருக்கலாம்.

நாம் ஏன் எதற்காக உழைத்துப் பாடுபட வேண்டும்? பகுத்தறிவு படைத்த நாம் பாடுபட்டுத்தான் ஆகவேண்டுமா? நாகரீகம் என்பது சதா உழைத்துத்தான் உண்ணவேண்டுமா? என்கிற கேள்விகள் எழுந்து மக்கள் சமூகம் கஷ்டம், தியாகமின்றி நலம்பெற முயற்சிக்கலாம். இது நாகரீகமாகக் கருதப்பட்டு பயன் அடைந்தாலும் அடையலாம்.

இன்றைய அரசியல் விஷயத்தில் இராட்டை சம்பந்தப்பட்டிருக்கிறது. இது ஆயிர வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்டு நாகரீகமாகப்பாவிக்கப்பட்டிருந்தது. பின்பு குப்பையில் தள்ளப்பட்டது. பிறகு மீண்டும் அது வெளிப்படுத்தப்பட்டு அதற்குக் கொஞ்சம் மதிப்புக் கொடுக்கப்பட்டு இராட்டை சுற்றுவதும்-தக்ளி நூல் நூற்பதும் நாகரீகமாகக் கருதப்பட்டது. ஆனாலும் அதுவும் ஒழிந்து போயிற்று என்றே சொல்லலாம். இவைகளையெல்லாம் எந்த விதமான (தேசம், மதம் ஜாதி) பற்றுதலுமில்லாத பொது மனிதன், பொதுநோக்கோடு கவனித்தால் உண்மை விளங்காமல் போகாது.

நாம் ஓர் காலத்தில் தேசம், தேசீயம்-தேசப்பற்று என்பதை நாகரீகமாகக் கருதி வந்திருக்கிறோம். ஆனால் இன்றோ அவைகளையெல்லாம் உதறித்தள்ளி மனித ஜீவ காருண்யம், உலக சகோதரத்துவம், மக்கள் அபிமானம் (Gitizen of the World) என்று கருதுவதையே பெரிதும் நாகரீகமாகக் கருத முன் வந்துவிட்டோம்.

ஒரு காலத்தில் நாகரீகமாகக்கருதி வந்ததை இன்று நாம் பரிகசித்து வருகிறோம். ஒரு மனிதன் தான் நாயக்கன், முதலி, வைணவன், சைவன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமை பாராட்டிக்கொண்டு ஒவ்வொருவரும் தாங்கள் மிகவும் மேல் சாதிக்காரனாவதற்குச் சைவ வைணவப்போக் கைப்பற்றிக்கொண்டு பூணூலையும் நாமத்தையும் போட்டுத் தங்கள் மதத்தையும் சிலாகித்துப் பிதற்றிக்கொண்டும் வந்தான். ஆனால் இன்றைய தினம் இவைகளையெல்லாம் புத்தி கெட்ட தனமென்றும், முற்போக்குக்கு முரணானதென்றும் கூறி வெகுவாகக் கண்டனம் செய்து வருகிறோம்: ஒரு காலத்தில் தனித் தனித் தத்துவம் நாகரீகமாகக் கருதப்பட்

டது. உதாரணமாக ஒரு தனித்தனி ஜாதி நன்மையும்-தேச நன்மையும் சிலாக்கியமாகக் கருதப்பட்டது. ஆனால் ஒரு ஜாதியின் அனுகூலம் பிற ஜாதியானுக்குப் பாதகம் என்பதையும் ஒரு தேச நன்மை மற்றொரு தேசத்திற்கு பொல்லாங்கு என்பதையும் நாம் இன்று நன்கு உணர ஆரம்பித்து விட்டோம்.

தோழர்களே! நான் குறிப்பாக ஒரு விஷயத்தைப்பற்றி வற்புறுத்த விரும்புகிறேன். அதாவது நாம் அனுபவ முதிர்ச்சியால் அறிவு ஆராய்ச்சியால் நாம் முற்போக் கடைந்துகொண்டு வருகிறோம் என்பதேயாம். நாம் எல்லா மனிதர்களையும் அறிவின் உணர்ச்சியால் ஆழ்ந்து கவனிக்கிறோம். உதாரணமாக வியாபாரிகளை-மக்கள் சமூகத்தின் நலனைக் கெடுத்து லாபமடையும் கோஷ்டியைச் சேர்ந்தவர்களென்றும், லேவாதேவிக்காரர்களை - மனித சமூக நாசகர்த்தாக்களென்றும், மத ஆதிக்கங்கொண்ட வர்க்கத்தினர்களை—மனித சமூக விரோதிகளென்றும் கண்டிக்கின்றோம்.

நாகரீகம் என்பது பிடிபடாதஓர் விஷயமென்று முன்பே கூறினேன். நம்நாட்டு பெண்கள் எப்படி பெல்ட் (Belt) கட்டாமல் சீலை கட்டுகிறார்களென்றும், அது இடுப்பில் எவ்வாறு தங்கியிருக்கிறதென்றும், தலைக்கு ஊசி இல்லாமல் பெண்கள் எவ்வாறு மயிர்களைச் சேர்த்து முடிந்துகொள்ளுகிறார்களென்றும் நாம் சாப்பாட்டுக்கு தினம் ஒரு இலை (Plate) எப்படி செலவு செய்கின்றோம், என்ன மகத்தான நஷ்டமென்றும், மேனாட்டார் ஆச்சரியப்பட்டு நம்மவர்களைக் கேட்பவரையும் கேட்டிருக்கிறோம். ஒவ்வொருவரும் அவர்களின் செய்கையை சரியாக உணராததினால் சிலவற்றை ஆச்சரியமாகக் கருத நேரிடுகிறது.

நம்மிடையேயுள்ள சாதி அபிமானம், சொந்தக்கார அபிமானம், பாஷா அபிமானம், தேசாபிமானம் எல்லாம் தொலையவேண்டும். இல்லாவிட்டால் எந்தநல்ல விஷயத்திலும் நாம் முடிவு காணுவது சரியாக ஆகிவிடாது.

காந்தியார் மேனாட்டில் முழங்கால் துண்டோடு—போதிய ஆடையின்றிப் போனபெருமையைப்பற்றி சிலர் பெருமையாகப் பேசிக்கொள்கிறார்கள். இது எவ்வளவு தூரம் புத்திசாலித்தனமானதாகும்! சௌகரியத்திற்கா

கடவுள் இல்லை.

(லாலா லஜபதிராய்)

ஒரு காலத்தில் கடவுளை நான் நம்பியதுண்டு. கடவுளை நோக்கிப் பிரார்த்திப்பதால், அவர் நமது வேண்டுகோளைக் கேட்டு நமக்கு நன்மை செய்கிறாரென நம்பினேன். நன்மையான தர்ம கைங்கர்யஞ் செய்கிறவர்களுக்குக் கடவுள் நன்மையையே செய்கிறார் என்றும், துஷ்டர்களை அடியோடு அழித்து நிக்கிரகஞ் செய்கிறாரென்றும் எண்ணினேன். இந்த நம்பிக்கையில் நான் மகா உறுதிகொண்டிருந்தேன். ஆனால் படிப்படியாக என் நம்பிக்கை குறைந்துகொண்டு வந்து இப்பொழுது அந்த நம்பிக்கையே எனக்கில்லாமல் போய்விட்டது. இந்த மாய வஞ்சகம் நிறைந்த ஒரு உலகத்தை ஆண்டு நடத்திக்

கவும்—நன்மைக்காகவும் அங்கு அதிக ஆடைகளை பந்தோபஸ்துக்காக அணிந்து கொள்ளாமல் பிடிவாதத் தோடு—கேவலம் இந்திய தர்மம் என்ற வெறும் எண்ணத் திற்காக குளிரில் விறைத்துப்போக இங்கிலாந்து வாசம் செய்தது எவ்வளவு தூரம் நியாயமான செய்கையாகும்?

புதிய எண்ணங்களும் புதிய எழுச்சிகளும்—புதிய காரியங்களும் நிகழ்கின்றன. நீங்களும் காலப்போக்கின் உயரிய பலனை வீணாக்காது பகுத்தறிவை மேற் போட்டுக்கொண்டு ஜன சமூதாய நன்மையைத்தேடி பாடுபட முன் வாருங்கள். உங்களுடைய முயற்சிக்கு எல்லாம் வெற்றியே உண்டு. வெறும் கடவுள் நம்பிக்கைகொண்டிருந்தவர்களும் கூட தங்களுடைய போக்கை மாற்றிக்கொண்டு முயற்சி மெய்வருந்தக் கூலி தரும் என்று சொல்லிவருகிறார்கள். ஆகவே தோழர்களே! நீங்கள் தன் நம்பிக்கைகொண்டு—மக்களின் விடுதலைக்கு சரியான வழிகளில் பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டு போராடவாருங்கள்.

காப்பாற்றி வரும் ஒரு கடவுளை நான் எப்படி நம்பமுடியும்? அக்கடவுள் மகா அன்புடையவர், மகா கருணாநிதி, சக்தியவந்தர், சர்வ வல்லமையுள்ளவர், எங்கும் பரம்பொருளாக நிறைந்திருப்பவர் என்பதை நான் எப்படி நம்பக்கூடும்? மகா தயாநிதி சத்தியமே ஒரு உருவான மெய்க்கடவுள் இருந்தால் இந்த உலகத்தைச் சிருஷ்டித்திருக்க முடியுமா? இந்த உலகம் அநீதி நிறைந்தது; சமத்வத்திற்குப் பரம விரோதியாய் இருக்கிறது; சகல கொடுமைகளுக்கும் உறைவிடம்; மிருகத்தனமானது; வஞ்சகம், சூது, எமாற்றம் முதலியவை உருவெடுத்த மனிதர்கள் நிறைந்தது. இந்த நாசமான இந்த உலகத்தை சத்திய வந்தரான கடவுள் உண்டு பண்ணியிருக்க முடியுமா? பல ஆயிரக் கணக்கான கொடியர் இவ்வுலகில் ஜீவிக்கிறார்கள். இன்னும்பலர் மூட்டாள்கள்; அவர்களுக்குமூளை என்பதே கிடையாது. அன்பு, சத்தியம் நிறைந்த இருதயத்தை இழந்த துஷ்டர்கள் பல ஆயிரம். எழைகளை இம்சிக்கும் ராக்ஷதர்களும், சத்தியவந்தரை தொல்லைப்படுத்தி, அடக்கி, நசுக்கி, மண்ணுக்கு இரையாக்கும் மிருகத்தனம் படைத்தவர்களும் இன்னம் பல ஆயிரம். கொள்ளையடிக்கும் திருடர்கள் பலர். சுயநலமே உருக்கொண்ட தீயர்கள் எத்தனையோ லக்ஷம். இந்த சுயநலப்பேய்களே மகா சொகுசாக, உல்லாச வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். எழைகளை வஞ்சித்து இம்சித்துத் துன்புறுத்துகிறார்கள். எழைகளின் கதியோ அதோ கதிதான். அவர்கள் மானமிழந்து அடிமைகளாகி, தரித்திரத்திற்குள்ளாகி, உண்ண உணவின்றி, உடுக்க ஆடையின்றி பசியால் வாடி மடிகின்றனர். முடிவில் மண்ணோடு மண்ணாய்ப்போகிறார்கள். உலகில் இந்தக்கொடுமைகள் ஏன்? சத்தியமும், உண்மையும் உருக்கொண்ட ஒரு தெய்வம் இந்த கொடிய உலகத்தை உண்டு பண்ணியிருக்க முடியுமா?

வேதங்கள் பொய்.

சத்தியம் என்பது என்ன? சத்தியம் எங்கிருக்கிறது? வேதங்களிலாவது உண்மை இருக்கிறதா அல்லது நம்பிக்கையாவது உண்டா? வேதங்களில் சத்தியத்தைக்கண்டு பிடித்துவிட்டதாகச் சிலர் பறை சாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அதெல்லாம் வெறும் பொய்க்கூற்று. அவர்கள் ஏதோ மாய்கையில் மூழ்கி அவ்வாறு அல்லற்படுகிறார்கள். வெறும் மத வெறி கொண்டவர்களே உண்மையிருப்பதாக உளறிக்கொண்டிருப்பதுண்டு. புத்த பகவானோ, கிறிஸ்துவோ, மகமது நபியோ உண்மையைக் கண்டு பிடித்திருக்கிறார்களா? அவர்கள் கண்டு

மக்கள் குற்றம் செய்வானேன்?

சமயபோதனைகளாலும் சர்க்கார் தண்டனைகளாலும் மக்கள் ஒழுக்கம் அடைந்தார்களா?

(ஐ. எம். இ.)

உலகத்தில் கொலை, களவு, விபசாரம், தற்கொலை முத லிய ஈனத் தொழில்களில் ஈடுபடும் மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகின்றது. இதற்குக் காரணம் என்ன வென்பதை ஆராய்ந்து இதற்கு தக்க சிகிச்சை செய்யா விட்டால் இவ்வகில மெங்கும் இன்னுமின்னும் பன்மடங்கு கொலை, களவு, விபசாரம், தற்கொலை தலைவிரித்தாடத் தலைப்பட்டுவிடும். இத்தகைய தவறான வழியில் உலகமக்கள்

பிடித்த சத்தியம் எங்கே? அந்தச் சத்தியம் மறைந்துவிட்டதா? அல்லது அதைப் போதிக்கப் புறப்பட்டவர்கள் திரித்து சத்தி யத்தையே மறைத்து விட்டார்களா? இவர்கள் மனிதர்களைப் பாகுபாடுபடுத்தி பிரித்து வைத்தது ஏன்? சத்திய மென்றால் ஒற்றுமையின்றி பல பாகுபாடு உண்டு பண்ணி சுயநலத்துடன் வாழ்வதென்று அர்த்தமா?

லாலாஜி வாழ்க்கை.

இவ்விதம்கூறும் நான் என் பொதுவாழ்க்கையில் ஈடு பட்டு இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபட்டுவந்தேனெனக் கேட்கலாம். உண்மையைக் கூறுமிடத்து நான் சுயநல நோக்கங் கொண்டே பொது சேவையில் ஈடுபட்டேனென்று கூறுவேன். அதாவது நான்உள்ளவரை ஏதேனும் ஒரு காரியம் செய்து கொண்டிருக்கவேண்டும். இது மனித சுபாவம்; ஒரு குணம். அது சதா என்னைக் கிளர்ச்சி செய்யத் தூண்டிக்கொண்டிருக் கிறது.

முன்னிலும் பன்மடங்கு ஈடுபட்டு விட்டார்கள் என்பதை பத்தி ரிகைகளைப் பார்த்தால் அறியலாம்.

மதங்களின் முயற்சியும், தோல்வியும்.

இத்தீச் செயல்களை ஒழிப்பதற்காக வேண்டி ஆயிரக் கணக்கான வருஷங்களாக மதங்கள் "கொலை, களவு, விபசாரம், தற்கொலை செய்யாதீர்கள்; செய்தால் கடவுள் தண்டிப்பார்; நரக லோகத்தில் தள்புறுத்துவார்....." என்று மக்களை பயமுறுத்தி மேற்படி ஈனத்தொழில்களிலிருந்து மக்களை விடுவிப்பதற்காக வேண்டி முயற்சித்தன. இதற்காகவேண்டி மதவாதிகளும் அநேககோடிரூபாய்களைச்செலவுசெய்துகோவில்களையும், மசூதிகளையும், சர்ச்சுகளையும் கட்டி, மக்களை வணங்கும்படி ஏவினார்கள். மதங்களின் பயமுறுத்துதலாலும் கடவுள வணக்கத்தாலும் மக்கள் இத்தீச் செயல்களில் ஈடுபடுவதை விட்டுவிட்டனரா? அல்லது "சர்வ வல்லமையும் சர்வ ஞானியுமான கடவுள்"ளாவது தடைப்படுத்தி விட்டாரா? இல்லவே இல்லை! (என் அத்துணை புகழும் அத்துணை வல்லமையுமுள்ள கடவுள், மக்கள் தீயவழியில் ஈடுபடுவதை பார்த்துக் கொண்டிருக்கிறார்?) மதங்களின் சட்டத்தையும் மீறி கடவுளின் தள்புறுத்துதலுக்கும் பயப்படாமல மக்கள் மேற்படி தீயவழியில் சர்வ சாதாரணமாய் ஈடுபட ஆரம்பித்து விட்டார்கள்.

அரசாங்கங்களின் முயற்சியும் தோல்வியும்.

மதங்களின் முயற்சி மட்டுமல்ல, இன்றைய வரைக்கும் உலகத்தில் ஏற்பட்ட ஒவ்வொரு அரசாங்கமும் மேற்காட்டிய தீச்செயல்களை ஒழிப்பதற்காக வேண்டி 'நீதி' ஸ்தலங்களையும், சிறைச்சாலைகளையும், பயங்கரமான மரணத்தண்டனைகளையும் ஏற்படுத்தி இவைகள் மூலமாய் மக்களைத் தண்டித்து மேற்காட்டிய ஈனத்தொழில்களை ஒழித்துவிட முயன்றார்கள். ஆனால் அம்முயற்சியும் விழலுக்கிறைத்த நீர்போலாயிற்று. மேலும் இவர்கள் எதிர்பார்த்ததற்கு மூரணாக நாளுக்கு நாள் மேற்படி தீச்செயல்களும் அதிகரித்துக்கொண்டே போகின்றன. அதற்குத் தக்கபடி நீதி ஸ்தலங்களும், சிறைச்சாலைகளும், கொடூரமான மரண தண்டனைகளும் பெருகிக்கொண்டே போகின்றன.

மூட்டாள்தனத்தை விட்டு காரணத்தை ஆராயுங்கள்.

மதங்களின் பயமுறுத்துதலுக்கும் அரசாங்கங்களின் கொடிய தண்டனைகளுக்கும் சிறிதும் அஞ்சாமல் மக்கள்

கொலை, களவு, விபசாரம், தற்கொலை முதலியவைகளைச் செய்கிறார்களே, இதற்கு காரணம் என்ன? உடனுக்குடன் அரசாங்கம் தண்டிப்பதை நன்றாக அறிந்திருந்தும் தனக்கு தண்டனைகிடைக்கும் என்பதையுணர்ந்தும் அவைகளுக்கஞ்சாமல் ஏன் மக்கள் மேற்படி தூர்ச்செயல்களில் ஈடுபடுகிறார்கள்? ஏதோ ஓர் காரணம் இருக்கவேண்டும். ஒவ்வொருவரும் ஏதாவதொரு தேவையை முன்னிட்டுத்தான் ஒவ்வொரு செய்கைகளையும் செய்கிறார்கள். அதேமாதிரி கொலை, களவு, விபசாரம், தற்கொலை முதலியவைகளையும் ஒரு அவசியமான தேவையை முன்னிட்டுத்தான் செய்கிறார்கள். எனவே நாம் அத்தகைய தேவையென்ன என்பதை ஆராய்ந்து அதைப் பூர்த்திபண்ணி விடுவோமேயாகில் மேற்காட்டிய தூர்ச்செயல்களை இவ்வுலகத்திலிருந்தே யகற்றிவிட முடியும். ஆனால் இன்றைய அரசாங்கங்களும் மதவாதிகளும் அத்தகைய நவீன வழியை—கொள்கையை பின்பற்றாமல் வேறு ஏதோ அர்த்தமற்ற—மூட்டாள்தனமான—வியர்த்தமான (நமது முன்னோர் அறியாமையினால் குறுகிய அறிவால் சிருஷ்டிக்கப்பட்ட) அத்துணை யிழிவான கொள்கைகளை அப்படியே பின்பற்றுகிறார்கள். (இத்தகைய பின்பற்றுதல் எதற்கு ஒப்பாகும் என்றால்:—நமது முன்னோர்கள் ரயில், மோட்டார், ஆகாயவிமானம், கம்பியில்லாத்தந்தி, மின்சாரம்.....என்பவைகள் என்ன வென்று கூட உணர்ந்துகொள்ள முடியாத அவ்வளவு குறுகிய நோக்கம் கொண்டவர்களால் கையாளப்பட்டமாட்டுவண்டி.....முதலியவைகளைத்தான் கையாளவேண்டும். அதல்லாமல் இன்றைய மனிதன் சுய அறிவால்கண்டுபிடிக்கப்பட்ட மேற்காட்டிய நவீன சாதனங்களாகிய ரயில், மோட்டார், ஆகாயவிமானம் கம்பியில்லாத்தந்தி, மின்சாரம்.... என்பவைகளை உபயோகிக்கக்கூடாது என்பதற்கு ஒப்பாகுமன்றோ?)

மேலும் நாம் இன்னும் மதங்களின் பயமுறுத்தலாலும், அரசாங்கங்களின் கொடிய சட்டங்களாலும் மேற்காட்டிய ஈனத்தொழில்களை ஒழிக்க முயற்சிப்பதால் இவ்வளவுகாலம் மதங்களையும் அரசாங்க சட்டங்களையும், எதிர்பார்த்ததினால் இன்றையவரைக்கும் எப்படி ஏமாற்றமடைந்தோமோ, இதைவிடப்பன்மடங்கு ஏமாற்றமடைவோம் என்பது திண்ணம்.

இன்றைய உலகில் கொலை, களவு, விபசாரம், தற்கொலை முதலிய தீய வழியில் ஈடுபடுகிற மக்களில் முக்காலே மூன்று வீசம் ஏழைமக்களே. இந்த ஏழைமக்கள் என்றால் எப்படிப்

பட்டவர்கள்? வாழ்க்கைக்கு தேவையான சாதனங்களாகிய உணவு, உடை, வீடு, சுகம் முதலியவைகள் இல்லாதவர்கள்! எனவே மேற்காட்டிய வாழ்க்கைச் சாதனங்கள் இல்லாதவர்கள் தமது இல்லாமையைப் போக்கிக்கொள்வதற்காக வேண்டி, வேலை தேடித்திரிகிறார்கள். எங்குபோய்க் கேட்டாலும் "வேலையில்லை" என்னும் பதிலே கிடைக்கின்றன. தேசங்களை நிர்வகிக்கும் அரசாங்கங்களும் வேலையில்லாமல் திண்டாடும் மக்களுக்கு வேலை கொடுப்பதுமில்லை; அல்லது அவர்களை வைத்து பாதுகாப்பதற்கு ஒரு வழி செய்வதுமில்லை. (வேலையில்லாமல் திண்டாடும் மக்களுக்கு வேலை கொடுக்க முடியாததேன் என்றால் இன்றைய அரசாங்கங்களுக்கு தேசங்களை நிர்வகிக்கக்கூடிய முறையே தெரியாதென்றுதான் சொல்லவேண்டும்!) இல்லாத ஏழைமக்கள் வேலை கிடைக்காமையினால் வேறு வழியின்றி இல்லாமையை நிவர்த்தி பண்ணிக்கொள்வதற்காகவேண்டி, தெருத் தெருவாய் வீடு வீடாய்ப் போய் பிச்சை கேட்கிறார்கள். பிச்சையோ தனது தேவையை பூர்த்திபண்ணக்கூடிய அளவு இல்லை. அதில் பத்தில் ஒரு பாகமேனும் கிடைப்பதில்லை. இத்தியாதி பலவழிகளிலும் ஏழைமக்கள் வறுமையை நிவர்த்திபண்ணிக்கொள்வான் வேண்டி முயற்சிக்கிறார்கள். ஆனால் ஒரு முயற்சியும் பயனளிப்பதில்லை (எங்கு நோக்கினும் உலகத்திலிருக்கும் நிலங்கள் சொத்துக்கள்.....முதலியவெல்லாம் சிறுபான்மையினர்களாகிய முதலாளி கூட்டத்தாரின் கைக்குள் சிக்குண்டிருப்பதே பெரும்பான்மையினர்களாகிய ஏழைமக்கள் பிழைக்கச் செய்யும் அத்துணைவழியும் தடைபடுவதற்கு காரணம்!) இதனால் இந்த இல்லாத ஏழைமக்கள் "நாம் என்ன செய்வது? இவ்வுலகில் வாழ்வதற்கு நமக்கு வழியொன்றுமில்லையே! குழந்தை குட்டிகளை காப்பாற்றுவதெப்படி?" என்று வருந்துகிறார்கள். கடவுளிடத்திலும் சதா தனது குறைபாட்டைச்சொல்லி மன்றாடியிட்டு "எல்லாம் வல்ல கடவுளே! எங்கும் நிறைந்தவனே!! சர்வசக்தியே! நீதிமானே!! அருளாளனே! அன்புடையானே!!எங்களுடைய பசியைத் தீர்ப்பாய் எங்கள் குழந்தை குட்டிகள் பசியின் கொடுமையால் மெலிந்து எலும்பும் தோலுமாய் இருக்கின்றனவே; எங்களால் இனி வறுமையின் கொடுமை சகிக்க முடியாது; இப்போது எங்களுக்கு உதவி செய்வார் மனித சமூகத்தில் ஒருவருமில்லையே! இந்த நெருக்கடியான சமயத்தில் எங்களை நீதான் காப்பாற்றுவாயாக" என்று மனிதன் தின்னும் அரக்கர்களுடைய ஹிருதயத்தில் கூட தயை உண்டாக்கக்கூடிய முறையில் கடவுளிடத்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தில் வேண்டுதல் புரிகிறார்கள்-வணங்குகிறார்கள்-தொழுகிறார்கள்-பலியிடுகிறார்கள். இன்னும் என்னவென்னமோவெல்லாம் செய்கிறார்கள், ஆனால் ஒருபதிலையும் ஒரு உதவியையும் காணோம்!

அந்தோ! இத்துணை வணக்கமும் வேண்டுகோள்களும் விழலுக்கிறைத்த நீர் போலாயிற்றே! பக்தர்கள் சொல்லும் அத்துணை புகழுக்குரிய கடவுளொருவனிருந்தால் இத்தகைய மக்களின் பரிதாபமான காட்சியைப் பார்த்துக் கொண்டிருப்பானா? மக்களின் பரிதாபகரமான காட்சியைப் பார்த்துக் கொண்டு ஒரு சிறிதும் உதவிசெய்யாமலிருப்பவனை வணங்கி இவ்வளவு காலம் உலக மக்கள் ஏமாற்றமடைந்தது போதாமல் இன்னுமின்னும் ஏமாற்றமடைவது அறிவீனமல்லவா? எத்துணை மக்கள் இத்தகைய கடவுளை நம்பி ஏமாற்ற மடைந்தார்கள்! எத்துணை மக்கள் இந்த கடவுள் என்னும் சொல்லை நம்பிச் சோம்பேறியானார்கள்! எத்துணை மக்கள் இந்த கடவுள் என்னும் வெறும் சொல்லை நம்பி இவ்வுலக இன்பத்தை வெறுத்தார்கள்! மனித சமூகம் என்றைக்கு இந்த உலக நிலைமைக்கும் கடவுளுக்கும் ஒத்திட்டுப் பார்த்து சிந்திப்பார்களோ அன்றைக்கே கடவுள் என்னும் சொல்லின் சூழ்ச்சியையும், புரட்டையும் கடவுள் பேரில் கட்டியிருக்கும் வீண் புகழுரைகளையும் உணர்வார்கள்!

தற்கொலைக்கு காரணம்.

எல்லாவற்றிலும் ஏமாற்றமடைந்து கடைசியில் கடவுளிடத்திலும் ஏமாற்றமடைந்த ஏழைமக்கள், பொருளில்லாதார்க்கு இவ்வுலமில்லை யென்னும் பழ்மொழிப்படி "சகிக்க முடியாத வறுமையின் கொடுமை, சகித்த தெல்லாம்போதும் போதும்" என்று சொல்லிக்கொண்டு ஏழைமக்கள் தற்கொலை புரிந்து கொள்கிறார்கள். மக்கள் தற்கொலை செய்து கொள்வதற்கு முக்கிய காரணம் வறுமையின் கொடுமையேயன்றி வேறல்ல என்பதை ஒவ்வொரு தற்கொலை நிகழ்ச்சிகளையும் கவனித்தால் அறியலாம். உதாரணமாக ராமநாதபுரம் ஜில்லா பாக நேரியில் இரண்டு வருஷத்திற்குமுன் நிகழ்ந்த பரிதாபகரமான தற்கொலை நிகழ்ச்சியிலிருந்து யூகிக்கலாம். அது வருமாறு:—

"ராமநாதபுரம் ஜில்லா பாகநேரியில் ஒரு ஸ்திரீ வறுமையின் கொடுமையைத்தாங்க முடியாமல், தன் உயிரைமாய்த்துக்

கொள்ளவும், தனது குழந்தைகள் நான்கையும் கொன்று விடவும் உறுதி கொண்டாளாம். சென்ற வெள்ளிக்கிழமை இரவு அவள் தனது வீட்டை விட்டுப் புறப்பட்டு ஒரு கிணற்றருகில் சென்று குழந்தைகளை ஒன்றன் பின் ஒன்றாக நான்கு குழந்தைகளையும் கிணற்றில் எறிந்து விட்டு தானும் தற்கொலை செய்து கொள்ள முயன்றாள். ஆனால் அவள் சொற்ப காயங்களுடன் தப்பி விட்டாள். மூன்று குழந்தைகளின் பிரேதங்கள் மட்டும் தண்ணீரில் மிதந்தன; மற்றொரு குழந்தையின் பிரேதம் கிடைக்கவில்லை.'' ('தினகரன்') இத்தகைய கல்லுதங்கான் நிகழ்ச்சிகளே இவ்வகில மெங்கும் சர்வ சாதாரணமாய் மலிந்து விட்டன. வறுமையின் கொடுமை சகிக்காவிட்டால் ஏழை மக்கள் வேறு என்ன தான் செய்வார்கள்? பிரக்யாதி பெற்ற போர் வீரனும் பிரான்ஸ் சக்கரவர்த்தியுமான நெப்போலியன் கூட வறுமையின் கொடுமை தாங்கமுடியாமல் ஓர் முறை தற்கொலை செய்து கொள்ளப்போனதாகவும், பிற்பாடு ஒரு நண்பரின் பண உதவியால் காப்பாற்றப்பட்டார் என்பதையும் நாம் நெப்போலியனின் சரித்திரத்தில் பார்க்கிறோம். ''நான் உலகத்தையே ஆட்டவல்லேன்'' என்று வீர கர்ஜனை செய்த நெப்போலியனே வறுமையின் கொடுமை பொறுக்க முடியாமல் தற்கொலை செய்துகொள்ள முயன்றிருக்கும் போது, இன்றைய ஏழைமக்களுக்கு வறுமையின் கொடுமையைச்சகித்துக் கொண்டிருக்க முடியுமா? இப்போது நாம் தற்கொலைகளுக்கு முழு முதல் காரணம் வறுமை என்பதை அறிகிறோம்.

அமெரிக்காவில் தற்கொலையைத் தடுக்கும் சங்கத்தை ஸ்தாபித்திருக்கும் எச். எம். வாரன் என்பவர் கூட அவர் பெற்ற 25 வருட அனுபவத்தால் ''தற்கொலைக்கு முக்கிய காரணம் வேலையில்லாத்திண்டாட்டமும்; வேலையிலிருந்து திடீரென நீக்கப்படுவதுமே. இதனால் மனவெறுப்படைந்து தரித்திரத்தால் தற்கொலை செய்து கொள்கிறார்கள். அமெரிக்காவில் 1932-ம் வருடத்தில் மாத்திரம் 20000 பேர் தற்கொலை செய்து கொண்டார்கள்'' என்று அவர் எழுதிய பத்திரிகைகளில் குறிப்பிட்டிருக்கிறார்.

களவு, கொலைக்கு காரணம்.

அநேகர் மேற்காட்டியபடி வறுமையை நிவர்த்தி பண்ணிக்கொள்வதற்கு ஒழுங்கான வழியொன்று மில்லாமையினால் களவு செய்கிறார்கள். களவு செய்யும்போது தற்காப்

ROJA MUTHIAH
47, HOSPITAL ROAD
KOTTAIYUR-623 108
P.M.DIST-INDIA

பின் நிமித்தம் ஏதாவது ஆயுதத்தை தன்னுடன் எடுத்துச் செல்கிறார்கள். களவு செய்யும்போது யாராவது தன்னைப் பிடிக்க வந்தால் உடனே தற்காப்பின் நிமித்தம் கையிலிருக்கும் ஆயுதத்தால் தாக்குகிறார்கள். உடனே கொலை நடக்கின்றது; ஏதோ கள்ளர்கள் தப்பியோட முயற்சிக்கிறார்கள்; முடியாவிட்டால் பிடித்து போலீசாரிடம் ஒப்படைக்கப்படுகிறார்கள். பிற்பாடு ஆகிறதென்ன? மரண தண்டனை கொடுக்கிறார்கள் அல்லது 5-வருடமோ 10 வருடமோ அரசாங்கத்தார் சிறைச் சாலையில் அடைத்து வைக்கிறார்கள். சிறைத்தண்டனை முடிந்தவுடன் அரசாங்கம் அவர்களுக்கு வேலை கொடுக்கிறார்களா? இல்லை, வெறுமனே வெளியே துரத்தி விடுகிறார்கள். மீண்டும் ஒழுங்கான முறையில் இல்லாமையை நிவர்த்தி பண்ணிக்கொள்ள மார்க்கமில்லாவிட்டால் என்ன செய்வார்கள்? தற்கொலை செய்துகொள்வார்கள். தற்கொலை செய்து கொள்ள இஷ்டமில்லாதவர்கள் பழைய குருடி கதவைத்திறடி என்று, பழையபடி கொலை, களவு செய்வார்கள். உலகத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் ஏற்பட்ட வறுமையை நிவர்த்தி பண்ணிக்கொள்வதற்காக வேண்டி முதலில் சிறு சிறு களவுகள் செய்தவர்கள் தான் காலம் போகப்போக அல்கபோன் (Alcapon) போன்ற மாபெரும் கொள்ளைக் கூட்டத்தலைவனாகி பதினாயிரக்கணக்கான வறுமையாளரைச்சேர்த்துக்கொண்டு கொள்ளையடிக்கிறார்கள். இப்போது சிறைச்சாலையில் இருக்கும் கைதிகள் எல்லாம் முன் வறுமையால் பீடிக்கப்பட்டு வறுமையை நிவர்த்தி பண்ணிக்கொள்வதற்காகக்களவு செய்தவர்களே! உலகத்தில் எல்லா மக்களுக்கும் சமமாக பொதுவாக இருக்கவேண்டிய நிலங்கள்.....முதலியவைகளை சிறு பான்மையினர்களாகிய முதலாளிகள் கைப்பற்றிக் கொண்டால் பெரும்பான்மையினர்களாகிய மக்கள் என்ன செய்வார்கள்? எங்கு நோக்கினும் எதைப்பார்த்தாலும் சர்வமும் முதலாளிக்கு சொந்தம்! ஏழைமக்களுக்கு தேவையானதைப் பெறுவதற்கு மார்க்கம் இல்லை. (இன்றைய அரசாங்கங்களும் சட்டங்கள் என்று ஏற்படுத்தி யிருப்பதெல்லாம் இந்த முதலாளித்துவத்தை இல்லாதவர்கள் எதிர்க்காமல் களவு செய்யவிடாமல் முதலாளித்துவத்தை பாதுகாப்பதற்கே) அதனால் ஏழை மக்கள் முதலாளிக்கு சொந்தமானதை களவு செய்கிறார்கள். களவு என்பது தனியுடமையாட்சியில் உள்ளவனிடமிருந்து இல்லாதவன் பெறும் மார்க்கம்.

விபசாரத்திற்கு காரணம்.

விபசாரம் என்பது மேற் காட்டியபடி பிழைக்கவழியற்று வறுமைக்காளான பெண் மக்கள் தங்களது வறுமையை — இல்லாமையை நிவர்த்தி பண்ணிக்கொள்ள ஒழுங்கான மார்க்கம் ஒன்றுமில்லாமையினால் வேறு இல்லாமையைநிவர்த்தி பண்ணிக் கொள்வான்வேண்டி உள்ளவனுக்கு தனது "மானத்தை" விற்கிறார்கள். நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பெண்கள் இல்லாமையை (வறுமையை) நிவர்த்தி செய்துகொள்வதற்கே விபசாரத்தில் ஈடுபடுகிறார்கள். இல்லாத பெண்கள் என்ன செய்வார்கள், இருக்கிறவர்களிடமிருந்து பெறக்கூடிய ஒரு வழியைக் கையாளவேண்டும். அந்த ஒரு வழிதான் விபசாரம். தனியுடமை யாட்சியில் பிழைக்க வழியற்ற ஏழைப் பெண்கள் உள்ளவனிடம் இருந்து பெறுவதற்கு வழியொன்று மில்லாமையால் கையாளும் ஒரு வழிக்குத்தான் விபசாரம் என்கிறோம். இந்த ஏழைப் பெண்கள் விபசாரம் என்னும் வழியையும் கையாளாவிட்டால் தற்கொலை செய்து கொள்ளும் ஒரு வழிதான் இவர்களுக்குண்டு. தனியுடமை ஆட்சியில் இதல்லாமல் வேறு வழியில்லை.

எல்லாவற்றிற்கும் காரணம் வறுமை.

வறுமையின் கொடுமை சகிக்க முடியாமை (வாழ்க்கை சாதனங்கிய உணவு, உடை, வீடு, சுகம் இல்லாமை) தான் உலகத்தில் நடக்கும் கொலை, களவு, விபசாரம், தற்கொலை முதலியவைக்கு காரணம் என்று அறிக. பொய், புரட்டு, ஏமாற்றம் என்பவைகளும் இந்த வறுமையால் ஏற்பட்டவைதான்! இப்போது நாம் கொலை, களவு, விபசாரம் தற்கொலை பொய், புரட்டு, ஏமாற்றம் என்பவைகளுக்கு என்ன பொருள் கொள்ளவேண்டும் என்றால் தனியுடமையாட்சியில் (வறுமையாளரை உண்டு பண்ணும் முதலாளி ஆட்சியில்) வறுமையைப் போக்கிக் கொள்ளுவதற்காகக் கையாளும் ஓர் மார்க்கம் என்றுதான் கொள்ளவேண்டும். கொலை, களவு, விபசாரம், தற்கொலை முதலியவை

கள் நிகழ்வது வறுமையால் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணர்ந்தும், இதை குற்றம் என்று அரசாங்கத்தார் கொடும் தண்டனைகளால் தண்டிப்பது நியாயமா? வறுமையால் நிகழ்வதைக் குற்றம் என்று கடவுள் நரகலோகத்தில் தண்புறுத்துவது நியாயமா? அல்லது அத்துணை தீச்செயல்களுக்கு முழுமுதல் காரணமாகிய வறுமையை ஒழிப்பது நியாயமா? இத்துணைக்கும் ஓர் அற்ப காரணமாகிய வறுமையை ஒழித்துவிட்டால், அவையனைத்தும் மனித சமூகத்திலிருந்து மறைந்து விடுமன்றோ? ஆனால் அரசாங்கங்களும் மதவாதிகளும் இந்த அற்ப காரணமாகிய வறுமையைஒழிப்பதற்கு தகுந்தகொள்கையைக் கையாளாமல் கொடிய தண்டனைகளாலும், மதங்களாலும் "மறுஉலக தண்டனை" களாலும் ஒழிக்க முயல்வது எத்துணை அறிவீனம்! இந்த முறை இதுவரைக்கும் எதிர்பார்க்கும் பயனையளிக்க வில்லையல்லவா?

(உலகத்தில் கடவுளால் எத்துணையோ மதங்களும், தீர்க்கதரிசிகளும், அவதாரங்களும், முப்பத்து முக்கோடி தேவர்களும் தோன்றினராம். இஸ்லாமிய கொள்கைப்படி ஒரு லட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்கள் தோன்றியும் கடைசியில் மிர்சாசாகிப் தோன்றியும் "அருள், அன்பு, நீதி, சர்வசக்தி, திரிகாலஞானி.....என்னும், "அல்லா (ஹ்)" ஒருவனிருந்தும் சகல அட்டூழியங்களுக்கும் கர்த்தாவாய் காரணமாய் இருக்கும் அற்புதமான வறுமையை ஒழித்துவிடத் தெரியாமல் திண்டாடியிருக்கிறார்கள்—திண்டாடுகிறார்கள். உலகத்தில் இத்துணை லட்சம் கடவுள் அவதாரங்களும், கடவுள் குமாரர்களும் தோன்றியும், "எல்லாம்வல்ல கடவுள்" இருந்தும் மக்களின் வறுமையைத் தீர்த்து எல்லோரும் இன்புற்றிருக்கக்கூடிய ஓர் முறையை தோற்றுவிக்க முடியவில்லை. ஆனால் ரஷியாவில் தோழர் லெனினால் தோற்றுவிக்கப்பட்ட மூன்றுநாள் சமதர்ம—பொதுவுடமை புரட்சி, கடவுளாலும் அல்லா (ஹ்) வாலும் தீர்க்கதரிசிகளாலும் முடியாத அத்துணையையும் சாதித்து விட்டதல்லவா? கடவுள் புரட்டையும் மதங்களின் புரட்டை

யும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கியும், மதவாதிகள் இன்னும் மதத்தையும், தீர்க்கதரிசிகளையும், கடவுளையும் கட்டியழுவதேன்? இனிமேலாவது முட்டாள் தனத்தையும் மூட நம்பிக்கையையும் விட்டொழிக்கப்படாதா? "விஞ்ஞானத்திற்கு ஒத்தமதம், பகுத்தறிவிற்கு ஒத்தமதம், எல்லா காலத்திற்கும் ஏற்றமதம் என்று சில மதவாதிகள் உலகத்தையே ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள்! மதவாதிகளே! இனி உங்களுடைய ஏமாற்றத்திற்கு இடமில்லை யென்பதை உணருங்கள்! விஞ்ஞானத்தையும் பகுத்தறிவையும் கண்டால் மதங்கள் பஞ்சாய்ப் பறக்கின்றனவே! அத்துணை நபிமார்களும், அவதாரங்களும் தோன்றியும், எல்லாம் வல்ல கடவுளிருந்தும், எத்துணையோ மதங்கள் தோன்றியும் உலகம் இவ்வளவுகேவல நிலைமையிலிருப்பதேன்?)

வறுமையை அகற்றும் சமதர்மம்.

இப்போது நாம் மேலே ஆராய்ந்ததில் எல்லா தீச்செயல்களுக்கும் காரணம் வறுமை யென்பதையும், "கடவுள்" என்பதனால் மக்களுக்கு ஆகப்போவது, ஆயினது ஒன்றுமில்லை யென்பதையும், மதங்களும் தீர்க்கதரிசிகளும் இன்றைய மக்களுக்கு உபயோகமற்றவைகள் என்பதையும் அறிகின்றோம். உலகத்தில் வறுமையை பொருளாதார நெருக்கடியை ஒழித்து சாந்தியையும்—சமாதானத்தையும்—நிம்மதியையும் நிலைநாட்ட வேண்டுமாகில் சமதர்மம்—பொதுவுடமை என்பதனால் தான் ஆகும்! சமதர்மம்—பொதுவுடமை என்பதுமட்டும்தான் நவீனக் கொள்கை! சமதர்மத்தை பின்பற்றினதினால் தான் இன்றைக்கு ஸோவியத் ரஷியா வறுமையை ஒழித்து வெற்றியடைந்திருப்பதை சமதர்மத்தின் விரோதிகள்கூட கூறுகிறார்கள்! உலகமெங்கும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு, மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் திண்டாடுகிறார்கள். இதை யகற்றுவதற்கு வழிதெரியாமல் பொருளாதார நிபுணர்கள் (மெய்ஞ்ஞானமற்ற முட்டாள் நிபுணர்கள்) எல்லாம் மண்டையில் அடித்துக்கொண்டு கூப்பாடு போடுகிறார்கள்! ஆனால்

ஸோவியத்ரஷியாவோ, பொருளாதாரத்தில்வெற்றிபெற்றுத் திகழ்கின்றது! ரஷியாவைத் தவிரமற்றைய காடுகள் இன்றைக்கு பொருளாதாரநெருக்கடிக்குள் சிக்குண்டுதவிப்பதற்குகாரணம்தனியுடமை யாட்சியேயன்றி வேறல்ல. ஒவ்வொரு முதலாளியும்தனது சுயநலத்திற்காகவேண்டிதொழிற்சாலைகளையும், ஆலைகளையும், விவசாயப்பண்ணைகளையும் வைத்துநடத்துவதினால்தான் உலகில் வறுமைதாண்டுவமாடுகின்றது. முதலாளிகள் கையிலும் அரசாங்கங்கள் கையிலும் சிக்குண்டிருக்கும் எல்லாவற்றையும் பறித்து பொதுவுடமைஆட்சியின் கீழ்வைத்து நடத்துவோமாகில் வறுமையென்பதற்கு இடமேயில்லாமல் போய்விடும். தனியுடமையில் ஒவ்வொருவனும் ''நான் எப்படியாவது முதலாளியாகவேண்டும்'' என்றுமுயற்சிக்கிறான். ஒருவன் முதலாளியாக வேண்டுமாகில் ஒன்பதுபேர் வறுமையாளர்களாக வேண்டும். ஒன்பதுபேரை தரித்திரவானாக்காமல் ஒருவனுக்கும் முதலாளியாக வழியில்லை. தற்போது இருக்கும் முதலாளித்துவத்தைதலைகீழாய்க்கவிழ்த்தி பொதுவுடமை ஆட்சியை நிலைநாட்டினால் தான், எல்லாமக்களும் சுயமரியாதையுடன் இன்புற்றுவாழமுடியும். பொதுவுடமை ஒன்றுதான் மக்களுடைய தேவையைப் பூர்த்தி பண்ணக்கூடிய மாபெரும் திட்டங்களைபோட்டு மக்களின் தேவையைப் பூர்த்திபண்ணுகின்றது.

பொதுவுடமை ஒன்றினால்தான் எல்லா மக்களுக்கும் தேவையான வாழ்க்கை சாதனங்களாகிய உணவு, உடை, வீடு, சுகம் எல்லாம் அளிக்க முடியும்.

எங்குபோயும் ஈற்றில் பொதுவுடமைக் கொள்கைக்குத்தான் வந்து சேரவேண்டும்! பொதுவுடமை நிலவாதவரைக்கும் உலகத்தில் சமாதானமும் நிலவாது; மக்களிடத்தில் சந்தோஷமும் திகழாது என்பது திண்ணம்.

ரஷ்யாவில் நாஸ்திகர்கள்.

(J. கேட்சன்)

சோவியத் ரஷ்ய நாஸ்திகப் போராட்ட ஐக்கிய சங்கத்தின் 5000000 தீவிர வாதிகளடங்கிய அங்கத்தினர்களின் கூட்டத்தில் அதன் சபை அக்கிராசனரும் அறிஞருமான புரொபசர் லூகாகெப்ஸ்கி (Lukacheffsky) என்பார் சமீபத்தில் கிழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

"ரஷ்யாவில் மதத்திற்குச் சாவு எப்பொழுது ஏற்படும்? இன்னும் 10-வருஷங்களில் என்று நாம் கினைக்கிறோம். ஏன்? அதற்கு முன்னதாகவே ஏற்படும்! நாம் நாளையே வெற்றிகொண்டு விடுவோம்!"

மாஸ்கோவின் மத்தியில் அமைந்த ஸ்ரீடின்கா(Sreetinka) வின் பழுதுபட்ட கிறிஸ்தவ ஆலயத்தின் கட்டிடத்தில் உள்ள இரண்டாவது மெத்தையின் அவரது சிறிய ஆபீஸ் அறையில் நான் உட்கார்ந்து, கிறிஸ்தவ மதத்தோடு சோவியத் ரஷ்யா யுத்தம் செய்து வருவதின் சாதக பாதகங்களைப் பற்றி

ஆகவே பொது உடமை நிலைமை ஒரு நாட்டில் ஏற்பட வேண்டுமானால் அந்நாட்டு மக்களுக்கு முதலில் கடவுளின் சர்வ வல்லமைத் தன்மையும், சகலத்துக்கும் கடவுளே பிரதானம் என்பதும், மதப்பேயும், ஜாதிப்பேயும் ஒழிந்தாக வேண்டும்; கடவுள் மத தரகர்கள் தொழிலின்போதான் இருந்தாலும் பிறவியின் போதால் இருந்தாலும் அழிபட்டு ஆகவேண்டும். இந்தபடியான நிலைமை ஏற்பட்ட பிறகே பொது உடமைக்கொள்கைக்கு எந்த நாட்டிலும் தாராள இடமுண்டாகும்.

மூன்று மணிநேரம் பேசி அளவளாவிக் கொண்டிருந்தேன்.

பக்திவிஸ்வாசிகள் அவர்களுடைய இறுதிப் போராட்டத்தை எவ்வளவுதூரம் நடத்தித் தங்களுடைய நம்பிக்கைகளை நிலை நிறுத்த முயற்சித்தாலும்கூட முடிவில் சர்ச்சானது கண்டிப்பாக அழிந்தொழிந்து போகுமென்பதே எனது முடிவாக இறுதியிலேற்பட்டது.

நாஸ்திகப் போராட்ட ஐக்கிய சங்கமானது (The Union of Militant Atheist) அதனை(Chruch ஐ) அடியோடு நாஸ்தியாக்கவே முடிவு கொண்டுள்ளது.

நான் கடந்த 10-வருஷங்களாகவே இந்த அதிதீவிர சங்கத்தின் நடவடிக்கைகளைக் கவனித்து வந்திருக்கின்றேன். 1922-வது ஆரம்பகால முதற்கொண்டு நாளுக்கு நான் அது பலம் கொண்டு அதிக செல்வாக்குப் பெற்று வருகிறது. ஆயிரம் பதினாயிரமாக அதனுடைய வாலிப அங்கத்தினர்கள் கிறிஸ்துமஸ்ஸின் காலையிலும் ஈஸ்டரின் மாலையிலுமாக நாஸ்திக வினம்பர மொழிகளைத் தாங்கி கடவுள் இல்லையென்ற பாட்டுப்பாடி கிறிஸ்துவைக் கேலி செய்து வருவதை நான் பார்த்திருக்கிறேன்.

நான் லூகாகெப்ஸ்கியோடு சந்தித்துப் பேசியிருந்த காலத்திற்குப் பின்னர்தான் இந்த இயக்கத்தின் விரிந்த நோக்கத்தையும்-வலுவையும்- துணிந்த முடிபையும் அதனின் இறுதியான முடிந்த லக்ஷியத்தையும், வாஸ்தவத்திலேயே நான் போற்றத் தலைப்பட்டேன். அது அதனுடைய வேலை முறைகளில் வெற்றி பெறுவதினின்று எதனாலும் நின்று விடாது. அது கூடுமானால் உலக மனைத்தையும் தன் கொடியின்கீழ் கொண்டு நிறுத்த முடியும்.

ரஷ்யாவில் எனக்கேற்பட்டுள்ள நீண்ட அனுபவத்திற்கு பின்னருங்கூட அங்கு உள்ள எல்லா கிராமங்களிலும்—பல பெரிய நகரங்களிலும் இன்றைய தினம் கடவுளற்ற குறி கொண்டு அங்கு விளங்குகிறதென்று என்னால் எப்பொழுதேனும் உணர முடியவில்லை. உக்ரெயினில் உள்ள ஒரு நகரமும் வடகாகசிலுள்ள இரண்டு நகரமும் (Anti-christ) கிறிஸ்தவ விரோத தேசமென்று சர்க்கார் அறிக்கை மூலம் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வெற்றிகரமான்

முடிவுக்குக்காரணம் நாஸ்திகப் போராட்ட ஐக்கிய சங்கத் தார்களும் புரொபசர்லூகா கெப்ஸ்கியுமாகும்.

கட்டுக்கடங்கிய நூற்றுக்கணக்கான வீரர்பட்டாளங்கள் தேசத்தின் ஒவ்வொரு மூலைகளிலும் முடுக்குகளிலும் கிறிஸ்துவத்தைப்பற்றியும்—மதத்தைப்பற்றியும் அடியோடு —ஒரேயடியாக ஒழிக்க வெகு தீவிரமாக முனைந்து நிற் கின்றன.

சமதர்ம ஐக்கிய பஞ்சாயத்து குடி அரசின்(ரஷ்யாவின்) 27 அல்லது 28 தனித்தனி குடி ஆட்சிகளில் சர்ச்சானது காளா வட்டத்தில் தரை மட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டி ருக்கிறது. கான் சென்ற இரண்டுவருஷங்களுக்கு முன்பு மாஸ்கோவில் இருந்த காலத்தில் கண்டதை விட இன்று இருபதுக் கணக்கான சர்ச்சுகள் (Scores of church) மறைந்தொழிந்தன. நமதுகர்த்தரின் பிரக் யாதி பெற்ற காதிடிரெலும் கூட—அதுவும் இறந்து பட்ட பட்ரியார்க் டிக்ஹோன் இருபது வருஷம் பூஜிக்கப் பட்டதும் தங்கஸ்தூபிகளுக்குப் பிரக்கியாதியடைந்ததுமான அது இன்று மாஸ்கோ ஆற்றின் கரையருகே பாழ்பட்ட அழிந்த குவியலாக விளங்குகிறது. அந்த இடத்தில் இன் றைய காலச்சக்கரத்தின் ஒளியின் சிற்பசாஸ்திர எடுத்துக் காட்டாக சோவியத்துகளின் மாட கூடங்கள் உயர்த்தப்படு கின்றன. சரித்திர பிரக்கியாதியடைந்ததும், ரோமாபுரியின் அர்ச் பீட்டரின் ஆலயத்திற்கு ஒப்பிடப்படுவதுமான லெனின் கிராட்கதகாரத்தில் அமைந்த அர்ச்ஐசக் காதிடிரெலானது இன்று கிறிஸ்தவவிரோத, மதவிரோத கண்காட்சி சாலை யாக விளங்குகிறது. ஐந்து ரூபிள் காகிதங்களை நீங்கள் கொடுத்தால் அங்கு உலகத்தின் எல்லா மதங்களின் சின்னங் கள், அம்சங்கள், விநோதங்கள் பிற எல்லாம் விசாலமான அழகிய பளிங்குக் கற்களிடையே பற்பலவித அழகிய தோற்றங் களோடு கண்கவர் வனப்பாக கண்டுகளித்து உல்லாசமாக லாம். கிறிஸ்துமதம், கத்தோலிக்கமதம், புராட்டஸ்டண்ட் மதம், புத்தம், மகமதீயம் மற்ற எல்லா மதங்களின் (வீரப் போக்கில் திகழும்) காட்சியும் அதன் போராட்ட (மத) குருக்கள் ஆடவர்—பெண்டிர் இவர்கள் கொண்டுள்ள நடை உடை கோலங்களின் காட்சியும் அங்கு கண்டு களிக்கலாம்.

அங்கு அவர்களுக்குள்ளேயே ஏற்பட்ட பெரும் மாறு தலை தரிசிக்கவே ஆயிரக் கணக்கான மக்கள் காள்தோறும்

இத்தப் பிரசித்திபெற்ற காதிடிசெல்களில் குழுமுகின்றார்கள். பழைய ஜார் மன்னரின் சார்ஸ்கோ, செலோ; பீடர்ஹோப் அரண்மனைகளுக்கு மக்கள் எவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டார்களோ, அது போலவேதான் இன்று பள்ளிச் சிறுவர்களும், சர்வகலாசாலை மாணவர்களும், தொழிலாளர்களும் திரள்திரளாக இந்த ஸ்தலங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றார்கள். இங்கு இவர்களுக்கு சோஷியத்ரஷ்ய சர்க்கார் மதத்தையும் அதனுடைய வேலைகளையும் கருதும் முறையாகிய பழைய கொடிய மத ஞாபங்களை வெட்ட வெளிச்சமாக்குகிறார்கள். ஒவ்வொரு நகரத்திலும் (City) ஒவ்வொரு டவுனிலும் இதுபோன்ற ஒரு மியூசியமிருக்கிறது. அநேக இடங்களில் இரண்டும் அதற்கு மேலும் இருக்கின்றன. ஆனால் எங்கும் நிலைமை ஒன்றே. காரல்மார்க்ஸ் 'மதம் மக்களுக்கு அபின்' என்றார். லெனின் அவரைப் பின்பற்றி அவரது மரணப் படுக்கையிலும் அதையே முடிவான கருத்தாக அறிவித்து விட்டார்.

சர்ச்சுகளைக் காப்பாற்ற வேண்டுமென்கிற போராட்டம் இன்னும் நடந்துகொண்டுதானிருக்கிறது. வாரத்தின் ஒவ்வொரு காளிலும் மாஸ்கோ, லெனின் கிரேட் போன்ற நகரங்களின் தெருக்களில் பாதிரிகள் உலாவிவருவதைப் பார்க்கலாம். ஆனால் அங்கு எந்த ரோமன்கத்தோலிக்க பாதிரிகளும் காணப்படார்; ஏனென்றால் அவர்கள் கைவிரல்விட்டு எண்ணக்கூடிய மிகச் சொற்பர்களே அங்கு மிகுந்துள்ளவர்களாவார்கள். ஆனால் பழைய வைதீக குருமார்களை (ரஷ்யாவில் அவர்களை அழைக்கப்படும் விதம்) "போப்புகளை" காணலாம். இவர்கள் பழுத்த நரை முதிர்ந்தவர்களாவார்கள். நீண்ட தாங்கல் அங்கியும்—வளைந்த கழுத்துப்பட்டைகளில் கனத்த வெண்மைப் பூட்டுகளமைந்ததான தங்கத்தோற்றமே அவர்கள் உருவங்களாகும். ரஷ்யாவின் அநேக இடங்களில் பிரார்த்தனைகள் நிகழுகின்றன. மாஸ்கோவில் அநேக சர்ச்சுகள் தரைமட்டமாக்கப்பட்ட போதிலும் இன்னும் அறுபதுக்கு மேல்பட்ட சர்ச்சுகள் அழுத்தமாக இருக்கின்றன. இவைகளில் அநேக சர்ச்சுகள் மியூசியங்களாக விளங்கியபோதிலும் அதிலும் ஒன்று சிறைச் சாலையாகஇருந்து செருப்புத் தொழிற்சாலையாக மாறியுள்ள போதிலும் ஞாயிறுகளில் சர்ச்சு போல் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு சர்ச்சு குடிகள வழக்கமாக நிரம்பி விடுகிறார்கள்.

அநேக சர்ச்சுகள் ஒழிக்கப்பட்டும் அதனால் புதிய சர்க்கார் கழகங்கள் நிறுவவும் அழகிய நகரங்களை சிருஷ்டி செய்யவும் பலனேற்பட்டுங்கூட மதபக்தர்கள் மீண்டுமிருப்பதைப் பார்க்க அதனின் காரணம் எனக்கு விளங்காமலிருந்தபோது அதற்கு புரொபசர் லூகாகெப்ஸ்கி "நாம் அவைகளை எல்லாம் அடைத்து விட்டால் நாம் அவர்களைப் பாதாளத்தில் வீழ்த்தியவர்களாவோம்" என்று கூறிப்பொல்லாத சிரிப்புக்காட்டி அவரின் கூரிய கரும்கண்களின் கொம்புவட்டமிட்ட கண்ணாடிகளை ஒழுங்குபடுத்திக் கொண்டார்.

"நாம் அவர்களுடைய அறைகளிலேயே அவர்களைப் புகுத்தி விடுகின்றோம். அங்கு இரகசியமாக பிரார்த்தனை செய்கின்றார்கள். பின்னால் அவர்களைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. நமது இயக்கத்தின் சாதாரண முற்போக்குக்கு அவர்களைச் சுயேச்சையாக விட்டுவிட வேண்டியது தான். ஆனால் இன்னும் சில வருஷங்களில் சர்ச்சுக்குச் செல்ல ஒருவரும் இருக்கவே மாட்டார்கள்." என்கிறார் லூகாகெப்ஸ்கி.

மாஸ்கோவின் 500 சர்ச்சுகளும் காதிடிரெல்களும் மறைக்கப்பட்டது முதல் இனி எந்நாளும் இந்த சிவப்பு தலைநகரத்தை (Red Capital) நாற்பது மடங்கு நாற்பது (1600) சர்ச்சுகளின் இருப்பிடமெனக் கூற முடியாதன்றோ? புதிய அரசியல் தலைமை ஸ்தானத்தின் தத்துவமானது, உயர்ந்தஸ்தூபிகளை (எவ்வளவு சீக்கிரத்தில் அவர்கள் தங்கள் நன்மைக்கு என்று கருதும் தீவிரத்தோடு) ஒழிக்க முடியுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் ஒழிக்கத் தூண்டியது. ஆனால் நகரத்தின் புதிய நிர்மாணத்தின் குறிப்பிடத் தகுந்த எடுத்துக்காட்டாக அநேகம் இருந்து நீண்ட வருஷங்கள் விளங்காமல் போகாது. கொடியோன் 'ஈவான்' (Ivan the Terrible) காலத்தில் சகல ரஷ்யா முழுவதிலும் விசேஷிக்கத்தக்கதாக இருந்த காதிடிரெலானது இனி நாட்டின் குறிப்

பிடத்தக்க சரித்திரச்சான்றாக விளங்கப்போவது சிவப்பு சதுக்கத்தில் அமையப்பெற்ற அர்ச்பெய்ல்ஸே ஆகும்.

மக்கள் வாழ்க்கையில் கடவுள் பிரார்த்தனைப்பழங் காலத்தில் புகுத்திவந்ததற்குப் பதிலாக ரஷ்ய நாஸ்திகவாதிகள், விஞ்ஞானத்திற்குப் பொருந்திய லோகாயுத (Scientific Didactic Materialism) சாஸ்திரத்தை இன்று புகுத்தியுள்ளார்கள். இவைகளை எதற்கு ஏற்பட்ட பள்ளிக்கூடமாக இருந்தபோதிலும் சரி, அங்கும் வேலை தொழிற்சாலைகளிலும், ஓர்க்ஷாப்புகளிலும், விவசாயிகளுடைய மத்தியில் நிலங்களிலும் முறையே கற்றுக் கொடுக்கின்றார்கள்; பிரசாரம் செய்கின்றார்கள்; போதிக்கின்றார்கள்.

கடவுளுக்கோ, சர்ச்சுக்கோ மதத்திற்கோ இவ்வுலகில் எங்கும் எந்த சொரூபத்திலும் இனி இடமில்லை என்பதே (காலக்கிரமத்தில் உலகத்தைப் பற்றும் பொதுவுடமையின் வெற்றிக்கான) தேவ நிந்தனைவாதி லூகாகெப்ஸ்கியினுடையவும் அவரது தீவிர நாஸ்திகப்போராட்ட சகபாடிகளுடையவும் கருத்தாகும்.

புரொபசர் லூகாகெப்ஸ்கி தனது இயக்க வேலைக்கும் சர்க்காருக்கும் சம்மந்தமில்லை யென்று சொல்பவர். தீவிர நாஸ்திகப் போராட்டத்தைக் கையாண்ட காலை ஹிம்சை முறை பிரயோகப்படுத்தப்பட்டதா என்று அவரைக் கேட்ட போது அவர் ஒத்துக்கொள்ள மறுத்து விட்டார். ஆனால் சர்ச்சுக்குப்போகும் தொழிலாளரின் சிந்தனையை வற்புறுத்தித் திருப்புவது துரோக தவறு என்று நான் சொன்னபோது அதை அவர் ஒப்புக்கொள்வதினின்றும் மறைக்க அவரால் முடியவில்லை. காலக்கிரமத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் (Believers) பிரார்த்தனையை விரும்ப சர்ச்சுகளே இருக்கா தென்று நான் தெரிவித்ததை அவர் ஒத்துக் கொண்டார்.

உலக விஷயம்.

உலகத்தைப்பற்றிய விஷயங்கள் யாவை? உலகமென்றால் என்ன? இது முதல் விஷயம். உலகத்தைக் கடவுளா படைத்தார்? இது இரண்டாம் விஷயம். மனிதனும், மற்றுமுள்ள சீவனைகளும், உலகில் தோன்றிய விதமென்ன? மனிதனுக்கு அவன் திரேகமன்னியில் உயிர் என்ற வேறு ஓர் தத்துவப் பொருளுண்டா? சீவன் உற்பத்தியான விதம் எப்படி? சீவனுக்கும், அசீவப்பொருளென்று கூறும் வஸ்துக்களுக்கும் என்ன வித்தியாசம்? "மனம்" என்று கூறும் சொல்லுக்கும், "மனமற்ற" என்று சொல்லுவதற்கும் என்ன வித்தியாசங்கள் உண்டு? மனித திரேகம் எப்படி உண்டாயது? மனித "மனம்" எவ்விதம் வளர்ந்தது? சடமென்றால் என்ன? மரணமென்றால் என்ன? கடவுளுண்டா? மறுஜனனமுண்டா? நன்மை என்றால் என்ன? தீமை என்றால் என்ன? நரக மோட்சங்களுண்டா? நீதி நியாயமென்றால் என்ன? நாகரீகமென்றால் என்ன? இத்தியாதி விஷயங்களைத்தான், மதஸ்தர்களும், சமயவாதிகளும், மெய்ஞ்ஞானிகளும், தத்துவஞானிகளும், காலாகாலமாக வாதித்து வருகின்றனர். மெய்ஞ்ஞானம் (Science) இந்த விஷங்களை ஆராய்ச்சி செய்வதற்கு முன், தத்துவஞானிகளும், மதஸ்தர்களுமே இந்த விஷயங்களைப்பற்றி வாதித்து வந்தனர். இன்றைக்கும் இவ்விரு கட்சியினரும் பலத்த விவாதம் செய்து வருகின்றனர். ஆனால் கடந்த 300 வருஷமாக மூன்றாம் பேர் வழி ஒரு கூட்டத்தார், இந்த விஷயங்களுக்கு அனுபவ வாயிலாக விடை பகரக்கூடுமாவென ஆராய்ந்து வருகின்றார்கள். இவர்கள்தான் Scintists என்பவர்கள். இவர்கள் முறை என்னவெனில், ஒவ்வொன்றையும் பரீட்சித்துப்பார்த்து, அவைகளின் ஆதாரங்களைத் தெரிந்துகொள்ளுவது. மழை எப்படி உண்டாகின்றது என்ற சாதாரண விஷயத்தை எடுத்துக் கொள்ளுவோம். மதஸ்தர்கள் கூறும் விடை யாதெனில், "இந்திர பகவான்" என்ற தேவனொருவனால் மழை உண்டாகின்றதென்பார்கள். அல்லது கிறிஸ்தவர் சொல்லுவது மாதிரி கடவுளால் மழை உண்டாகின்றதென்று கூறும் விடையும் ஒன்றுண்டு. இவ்விதமாக மதங்களும், தத்துவ ஞானிகளும் (Philosophers) இன்ன வஸ்து இன்னதென்று பரீட்சித்துப்

பார்க்காமலே கட்டுக்கதைகளை, சாதாரண விஷயங்களாகிய இடி, மின்னல், மழை, காற்று இவைகளுக்குக் கட்டி விடுகின்றனர். இதனைப் பாமர மக்கள், நம்பி மழைக்காகப் பூசை இடுவதும், இடி மின்னலுக்குக் காவு கொடுப்பதுமான மூடக்கிரிகைகளைச் செய்யத்தலைப்படுகின்றனர்.

ஆனால் மெய்ஞ்ஞானமோ வெனில், மழைத்தண்ணீரைப் பரீட்சித்துப்பார்த்து அது நிலத்தில் இருக்கும் தண்ணீரைப் போன்றது என்று தெரிந்துகொண்டு அதனை அனலில் காய்ச்சிப் பார்க்கின்றது. தண்ணீரைக் காய்ச்சினால் ஆவி ஆகிறது. அந்த ஆவியை ஒரு கண்ணாடிப்பாத்திரத்தில் பிடித்து வைத்தால் அது குளிந்தவுடன், மறுபடியும் தண்ணீராக மாறுகிறது. மழைத்தண்ணீர் மேகத்திலிருந்து உண்டாகின்ற விஷயம் பிரத்தியட்சம். அந்த மேகத்தை கண்ணாடிப் பாத்திரத்தில் பிடித்து குளிர் காற்றுப் படச்செய்தவுடன் அந்த மேக ஆவியும், தண்ணீராக மாறுகிறது. இந்தப் பரீட்சைகளால் மேகமும், ஜல ஆவியென்று தெரிகிறது. அந்த ஜல ஆவி குளிர் காற்றுப் பட்டவுடன் மழையாக மாறுகிறது என்று உணரலாம். பாத்திரத்திலுள்ள ஜலம் சுடுகை பட்டவுடன் ஆவியாக மாறுவதைப்போல், ஆறு, கடல், குளம், பள்ளங்களிலுள்ள ஜலமும் சூரிய வெப்பத்தால் ஆவியாக மாறி ஆகாயத்தில் மேகமாக உல்லாவுகின்றது. மேகத்தில் குளிர் காற்றுப்பட்டவுடன் மேகம், ஜலமாக வருஷிக்கிறது. இவ்விதப் பரீட்சைகளால் சூரிய வெப்பத்தால் ஜலம் ஆவிபாகி குளிர்பட்டவுடன், திரும்பவும் ஜலமாகப் பெய்கிறது. இதுதான் மழை உண்டாகும் சித்தாந்தம். இதற்குப் பூசை போட்டும் பலி இட்டும், துதித்தும் பயனென்னை? யாகங்கள் செய்தும் உபயோகமென்ன? ஆகாயத்தின் (Atmosphere) சீதோஷ்ண நிலைமையை மழையும் காற்றும் பொருந்தியுள்ளன. இதனை Thermometre, Barometre, என்ற இரண்டு கருவிகளால் நிர்ணயிக்கலாம். இடி, மின்னல், மழை இவைகளைப் பரீட்சை மூலமாக உண்டாக்கலாம். நீராவியைப் பிடித்து, அதில் மின் சாரத்தை நுழைய விட்டால், நீராவி ஜலமாக மாறும்போது சபத்துடனும், வெளிச்சத்துடனும் மாறுகின்றது. இது போலத்தான் மேக ஆவி ஜலமாக மாறும்போது இடியும், மின்னலுடன் மாறுதல் அடைகின்றது.

காற்று, வாயுபகவான் உண்டாக்குவதாக மதஸ்தர்கள் கூறுகின்றனர். இதுவும் மேற்போக்க மதக் கற்பிதங்களைப் போன்றது. அப்பகவான்யார்? அவனுக்கும், காற்றுக்கும் என்ன

சம்பந்தம்? இந்த சம்பந்தத்தை யார் தெரிந்து கொண்டவர்கள்? இவைகளை விசாரிப்பதுமில்லை. யாரோ எழுதி வைத்தார்கள், அதை நம்புகின்றோம் என்ற வழக்கச்சொல்லைக்கொண்டு இன்றைக்கும் வாயுபகவானால் காற்று உண்டாகிறது என்று சொல்லுகின்றார்கள்.

விஞ்ஞான விசாரணை செய்யத் துவக்கியதும், இந்திரன், வாயு முதலிய தேவதைகள் பறந்தோடிப்போகிறார்கள். காற்றை விசாரணைக் குட்படுத்துங்காலை காற்று இரண்டு மூன்று வகை ஆவிகளால் நிறைந்துள்ளது. "ஆக்ஸிஜன்" என்ற பிராண ஆவியும், "நைட்ரோஜன்" என்ற "கரிமலவாயு" வும் இன்னொரு வேறுவித ஆவியும், சில கணக்குப்படி கலந்து, சீதோஷ்ண நிலைமைக்கு உட்பட்டு தென்றலாகவும், வாடையாகவும், மேல்காற்றாகவும், மழைக்காற்றாகவும் (Monsoon) புயலாகவும், சுழல் காற்றாகவும் அடித்து வருகிறது. சிற்சில குறிகளைக்கண்டு மழை பெய்யும், புயல் அடிக்குமென்று நிர்ணயிக்கவும் கூடும். காற்று, மழை, இடி, மின்னல், புயல், வெள்ளம் முதலிய இயற்கை சம்பவங்களை பரீட்சை மூலமாக அறிந்து, அவைகள் உண்டாகும் காரணங்களையும் தெரிந்து கொண்டு இவை இன்னவிதமாக இனி நடக்குமென்றும் சொல்லக்கூடும். சம்பவங்களின் காரணங்களைத் தெரிந்து கொண்டு, இன்ன காலத்தில் இன்ன சந்தர்ப்பத்தில் இன்ன இன்ன சம்பவம் நடக்குமென்று முன்னதாகத்தெரிவிக்கும் சக்தி மெய்ஞ்ஞானமென்றுக்கே உளதென அறிதல் வேண்டும்.

மெய்ஞ்ஞான விசாரணைக்கும், மதத்துவவிசாரணைக்கு முள்ள வித்தியாசமென்னவெனில் மதத்துவங்களுக்கு விசாரணை என்பதே கிடையா. மெய்ஞ்ஞானத்திற்கு விசாரணையே ஆயுதம். மதங்கள் சம்பவங்களின் எதிர்கால நிலைமையைத் தெரிந்து சொல்ல முடியா. விஞ்ஞானத்திற்கு சம்பவங்களின் எதிர்கால நிலையைத் தெரிவிப்பதே அதன் முடிவு.

கடந்த 5000 வருஷமாக மதங்களும், ஆகமங்களும், வேதாந்தமும், இயற்கை சம்பவங்களை விசாரித்துணராமல், கற்பனா காரணங்களைக் கற்பித்துக்கொண்டு, பாமர மக்களை ஏமாற்றி வந்திருக்கின்றன. ஆனால் சென்ற 300 வருஷங்களாக, உள்ளதை உள்ளபடியாக விசாரித்து, தெரிந்தவரை சம்பவங்களின் காரணா காரணங்களைத் தெரிவித்து வருகின்றது.

இன்னொரு திருஷ்டாந்தத்தை எடுத்துக்கொள்ளுவோம். பிளேக் என்ற (Plague) மகாமாரி நோயை எடுத்துக்கொள்ளுவோம். இந்த நோயைப்பற்றி சில ஆயிரம் வருஷங்களாக மனிதருக்குத் தெரியும். பண்டைக் காலங்களில் லட்சக்கணக்காக மக்கள் மடிந்து வந்தனர். ஆனால் மதங்கள் இந்நோயைப்பற்றி என்ன தெரிவித்து வந்தன? இந்த நோய், மகாமாரி என்ற தேவதையால் உண்டாவதாகவும், அதற்குக் காவுகொடுத்து, அந்த தேவதையைத் திருப்தி செய்யவேண்டுமென்றும் தெரிவித்து வந்தன. என்ன காவு கொடுத்தும், என்ன துதி செய்தும், என்ன யாகங்கள் செய்தும் பிளேக் ஒழிந்தபாடில்லை. ஆயிரம் வருஷகாலமாக கோடிக்கணக்கான மக்கள் இக்கொடிய நோயால் மாண்டு வந்தனர். சென்ற 50 வருஷங்களுக்குள்தான் விஞ்ஞானம் இந்நோயை விசாரிக்க ஆரம்பித்தது. இந்த விசாரணையில் பிளேக் நோய் ஒரு சிறு கிருமியால் உண்டாகின்றதென்றும், அந்தக்கிருமி எலி மூலமாக மனிதனுக்குத் தொத்துவதாகவும், இந்தக் கிருமிக்கு அழுக்கு, நாற்றம் முதலிய அசுசிகள் ஆகாமென்றும் விளங்கியது. அது முதல் இந்தக்கொடிய நோயை விஞ்ஞான சிகிச்சையால் கட்டுப்படுத்த முடிந்தது. ஆசியாவில் அங்குமிங்கும் இன்றைக்கும் பிளேக் நோய் பரவி வந்தாலும், அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் பிளேக் நோயைத் தலைகாட்ட வொட்டாமல் செய்ய நேரிட்டது. மதங்களின் மக்களைக் கொன்ற மகாமாரி, எலியைக் கொன்றால் தானும் கொல்லப்படுகிறாள். சில இடங்களில் அழுக்கையும், நாற்றத்தையும் வறுமையையும் நீக்கினால், மகாமாரியும் நீங்கிவிடுகிறாள்!!

குளிர் சுரமென்று கூறும் Malaria வையும் தேவதைகளால் உண்டாவதாக மதங்கள் கூறுகின்றன. சுரம் அநேக வகைத்து. குளிர் சுரம் என்பது ஓர்வித சுரமாகும். அடுத்து அடுத்தும், அல்லது முறையாகவும் இந்த சுரம் வரும். மதங்கள் இந்தச் சுரத்திற்கு மஞ்சள் கந்தையில் காலணாவைச் சுற்றிக் கையில் கட்டினால் இந்தச் சுர அம்மாவுக்குப் பிரீதி உண்டாகி இந்த சுரத்தை நீக்குவாள் என்று மதகற்பனையைக்கையாண்டு வந்தனர், நமது இந்திய மக்கள். ஆனால் மஞ்சள் சுற்றியும், தேங்காய் உடைத்தும் கற்பூரம் கொளுத்தியும் வருஷா வருஷம் நமது மக்களில் இந்த சுரத்தால் 50 லட்சம் பேர் மாள்கின்றனர். இந்த மாபெரும் மதப்பொய்யால் லட்சக்கணக்கான மக்களை இந்தப் பொய்ப் பிடாரிக்குக் காவு கொடுத்து வருகின்றோம்! சென்ற 30, 40 வருஷங்களுக்கு முந்தித்தான் இந்தக் குளிர் சுரத்தின் காரணத்தை விஞ்ஞானம் கண்டறிந்தது.

குளிர் சுரம் கொண்ட மக்களின் இரத்தத்தைப் பரிசோதனை செய்து வந்ததில், அதில் ஒரு சிறு கிருமி இருக்கக்கண்டார்கள். அதே கிருமியை, Mosquito என்னும் கொசுக்களிலும் வாழ்வ தையும் கண்டார்கள். கொசுவால் கடியுண்டவர்களுக்கு மாத் திரம் பெரும்பான்மையாக இந்தக் குளிர் சுரம் வருவதையும் கண்டு கொண்டார்கள். இந்த குளிர் சுரக் கிருமிக்கு குனின் என்ற ஓர் வேம்பு, சத்துருவெனவுங் கண்டார்கள். குளிர் சுர மும், விஞ்ஞான சிகிச்சைக்கு உட்பட்டது. இந்த சிகிச்சை யால் கோடான கோடி மக்கள் இக்கொடிய நோயினின்று மீண்டு வருகின்றார்கள். விஷப்பங்களை விசாரித்து உணராத மதங்கள், எண்ணக்கூடாத மக்களை விஷ சரத்திற்குக் காவு கொடுத்துவரச் செய்தன. ஆனால், விஞ்ஞானமோ, பொறு மையுடன் விசாரித்ததுடன், சாந்தமுடன் விடாமுயற்சியுடன் சம்பவங்களின் இயற்கைக் காரணங்களைக் கண்டு பிடிக்க முயன்று, நோயற்ற வாழ்வை மக்கள் அடையும்ஞானத்தைத் தெரிவித்து வருகின்றது.

ஆனால் மூட மதங்களால் மக்களைக் காப்பது போய், மக்களை மடிய வைத்துக்கொள்ள நேரிட்டது.

ஒரு காலத்தில் மக்கள் நோயால் அவதிப்பட்டுவரும் விஷ யம் உலக விஷயமாய் இருந்தது. இன்று இந்த விஷயத்தை விஞ்ஞானம் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து விட்டது. மழை, காற்று, புயல், வெள்ளம் முதலிய விஷயங்களை மதங்களின் கையிலிருந்து பிடுங்கி அந்த விஷயங்களுக்கும் ஆதாரங்களைக் கண்டு பிடித்து வருகிறது. மற்ற உலக விஷயங்களுக்கு என்ன முடிவு விஞ்ஞானம் தெரிவிக்கின்றதென்று பார்ப்போம்.

விஞ்ஞான முறை ஏதோவோர் அற்புத முறை என்று எண்ணவேண்டியதில்லை. நாம் தினந்தோறும் சாதாரண விஷ யங்களுக்கு உபயோகப்படுத்தும் முறையே விஞ்ஞானம் கையா ளும் முறையாகும். கண்ணீர் குளிர்ந்து இருக்கிறதா என்று தெரிந்துகொள்ளுவதற்குக் குடித்துப்பார்க்கிறோம், அல்லது தொட்டுப்பார்க்கின்றோம். ஜலம் உப்பு ஜலமா, அல்லது நல்ல ஜலமா என்று தெரிந்து கொள்ள குடித்துப்பார்க்கின்றோம், அல்லது காய்ச்சிப்பார்க்கின்றோம். பால் கல்ல பாலா, அல்லது ஜலம் விட்ட பாலா என்று தெரிய, மீட்டர் போட்டுப் பார்க்கின் றோம். கறி ருசி அறியவேண்டுமானால் நாக்கில் ருசித்துப் பார்க்கின்றோம். இதைப் போன்றே எந்தப் பொருளின் குணங்களையும் தெரிந்துகொள்ள விஞ்ஞானம் அப்பொருள் களைப் பரீட்சித்துப் பார்த்து வருகின்றது. ஆனால் பொருள்

கேள்வியும்—பதிலும்.

சென்னை அடையாறு பிரம்மஞான சபையில் தோழர் ஜே. கிருஷ்ணமூர்த்தி கேள்விக்குப் பதில் கூறுகையில் அறிவித்ததாவது:—

ஒவ்வொருவருக்கும் குரு அவசியமல்லவா வென்றும், குருவிடத்தில் எனக்கு நம்பிக்கையுண்டா யென்றுமே நீங்கள் கேட்கின்றீர்கள். குருமார்கள் இருக்கின்றார்களா யென்றும் நீங்கள் அறிய விரும்புகின்றீர்கள். அவர்கள் இருக்கிறார்களில்லை யென்பதை நீங்களறிவானேன்? அத்தகையவர்கள் வழிகாட்டுவார்களென்பது உங்கள் அபிப்பிராயம். ஒரு ஆதாரவை நாடுகின்றீர்கள். அதற்கு எனது அங்கீகரிப்களில் பல, மிகவும் நுட்பமாக இருப்பதால் பலவித நுட்ப கருவிகளைக்கொண்டு விஞ்ஞானம் பரீட்சித்துப் பார்க்கின்றது. எது போலெனில், பாலின் சுத்தத்தை மீட்டரைக்கொண்டு பார்ப்பது போலவேயாகும்

நாது உலக முதல் விஷயமாகிய உலக மென்றால் என்ன? மதங்கள் கூறும் உலகமென்ன? விஞ்ஞானம் அறிந்துள்ள உலக மென்ன? இதைக் கண்டறிவோம். சராசரம் என்று சொல்லப்பட்ட எல்லாப் பொருள்களும் உலகமென்று இந்திய மத நூல்களில் கூறப்பட்டுள்ளது. சரம், அசரம் அதாவது உயிருள்ள பொருள்களும், உயிரற்ற பொருள்களும் அடங்கியது எதுவோ, அதுவே உலகமாகும். இது வேதாந்திகளுடைய உத்தேசம். ஆனால் அசரப்பொருள்கள் இன்னவை என்று தெரிந்துகொண்டார் இல்லை. உலகத்தில் உள்ள பொருள்கள் கோடி கோடி கோடியாயிரங்கோடியில் உயிருள்ள பொருள்களை மதிப்பதற்கில்லை. உலகத்தில் உயிருள்ள பொருள்கள் அவ்வளவு சிறுபான்மை என்று அறிதல் வேண்டும். இந்த அற்ப உயிருள்ள வஸ்துக்களில் மனிதனும் ஓர் அற்ப உயிர். ஆகலின் அசரப்பொருள்கள்தான் உலகத்தில் பெரும்பான்மையாக உள. இந்த அசரப் பொருள்கள் யாவை? இவை மதஸ்தர்களுக்காகிலும், அல்லது வேதாந்திகளுக்காகிலும் தெரியா. விஞ்ஞான மொன்றே உலகத்திலுள்ள அதாவது அடங்கியுள்ள பொருள்களை ஒருவாறாக அறிந்துள்ளது. இதனை விபரமாகத் தெரிந்துகொள்ளவேண்டுமானால் வான நூல்களில் அறிந்து கொள்ளலாம்.

பையும் பெற விரும்புகின்றீர்கள். குருமார்களிடம் நம்பிக்கையைப் பலப்படுத்த விரும்புகின்றீர்கள். அவ்வித நம்பிக்கை எனக்கு இல்லை. நம்பிக்கை பலப்படுவதால் சக்திஏற்படாது- நீங்கள் ஆதரவை நாடுவதன் காரணம் கற்பனாசக்திஇன்மையே- போய்யான நம்பிக்கைகளாலும், பழக்க வழக்கங்களாலும் கட்டுண்டு வீழ்ச்சி அடைந்துள்ளோம்- நமது மனதில் நம்பிக்கைகள் குடி கொண்டிருக்கும் வரையில் பூரணமாய் உணரும் சக்தியோ, சுதந்திரமோ இருக்காது. குருமார்கள் இருக்க வேண்டியது அவ்வளவு முக்கியமல்ல. பூரணமாக எல்லாவற்றையும் விட்டால் தான் உண்மையை அறிய முடியும்.

மற்றொரு கேள்விக்குத் தோழர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது:—

பாபம் என்பதொன்று உண்டென்று நான் கருதவில்லை. விவாகம் என்றால் என்ன? ஒரு பெண்ணை ஒரு ஆடவர் தமக்கே உரியவளாக்க பல சட்டங்களும், சடங்குகளும் இருக்கின்றன. சடங்கு நிறைவேறிவிட்டால் நீங்கள் எதுவேண்டுமானாலும் செய்யலாம். அதனை நீங்கள் சட்டரீதியானதென்றும், பாவமில்லாத தென்றும் கருதுகின்றீர்கள். ஆனால் விவாகமின்றி ஒரு பெண்ணைப்பெற்றிருப்பது பாவமாகிறது. உண்மை அன்பு இருக்குமானால் சட்டத்திற்கே இடமில்லை. ஆண் பெண் சம்பந்தம் பற்றிய பிரச்சினைகள் சட்டங்களால் மட்டுமே தீராது. கற்பனா சக்தி முற்றிலும் உணருவதே வழி.

கேள்வி:— ஸ்தாபனமும், மதமும் பெரும் பான்மையான மக்களுக்கு அவசியமென்பதும், ஆகவே அவர்களுக்குப் பிரயோஜன முடையவை யென்பதும் அனுபவத்தில் கண்ட உண்மையாகும். தாங்கள் இதை ஒத்துக்கொள்ளுகிறீர்களா?

பதில்:— நான் ஸ்தாபனம் எதுவுமிருப்பதை எதிர்க்கவில்லை- ஆனால் எந்த ஸ்தாபனமும் நம் உண்மையை அடையும்படிச் செய்யவல்லதல்ல.

கேள்வி:— நாளைக்கு யுத்தம் ஏற்பட்டு, ஒவ்வொருவரும் கட்டாயம் ராணுவத்தில் சேர வேண்டுமென்ற சட்டம் பிறக்குமானால் தாங்கள் என்ன செய்வீர்கள்?

பதில்:— தேசீயம் எங்கேயிருக்கிறதோ அங்கே யுத்தம் இருந்தே தீரும்; யுத்தத்தைத் தவிர்க்க முடியாது. நான் தேசீய வாதியல்லாததால் யுத்த சம்பந்தமாக எவ்வித உதவியும் செய்யமாட்டேன். ராணுவத்திலும் சேரமாட்டேன். காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை செய்து மீண்டும் காயம்படும்படி யுத்த முனைக்கு அனுப்பும் சென்சிலுலை வைத்திய படையிலும் சேரமாட்டேன்.

யுத்தம் ஏற்படும் முன்பே நான் ஒரு முடிவுக்கு வந்துவிடுவேன். சமாதான காலத்தில் நாம் என்ன செய்வதென்பதைத் தீர்மானிக்க முடியும். யுத்தம் ஏற்பட்டால் என்ன செய்வதென்ற கேள்விக்கு இடமேயில்லை. யுத்தத்தைத் தவிர்க்க நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? இதுவே சாத்தியமான காரியம். நாம் யுத்த தளவாடங்களை அதிகரித்துக்கொண்டே செல்வதால் முடிவில் யுத்தம் வந்தே தீரும். தேசீய உணர்ச்சியை நீங்கள் கொண்டிருக்கும்வரையில் ரத்தம் சிந்துவதோ, பொருளாதார கஷ்டத்தை உண்டு பண்ணுவதோவாகிய போராட்டம் இருந்தே தீரும்.

தனிப்பட்டவர்களாகிய உங்களாலும் என்னாலும் யுத்தத்தைத் தவிர்க்க முடியாது. யுத்தத்திற்கு விரோதமாகப் பிரசாரமே செய்யக்கூடும். அவ்வேலை செய்வதற்குக்கூட, நாம் எனது நாடு, எனது கடவுள் என்ற நோயை விட்டு விட வேண்டும்.

மரண பயம் ஏன்?

கேள்வி:— பயத்திற்கும் முக்கியமாக மரண பயத்திற்கும் காரணம் என்ன? மரணத்தைத் தவிர்க்க முடியாதென்றும், மரணம் இயற்கையான தென்றும் கருதி அப்பயம் முற்றிலும் இல்லாதிருக்க முடியுமா?

பதில்:— நமது நாட்கள் பூரணமற்றதாகவிருப்பதாலும், நமது காரியங்கள் பூர்த்தியாகாததாலுமே நாம் மரண பயம் கொள்ளுகின்றோம். எதிர்காலத்தைப்பற்றி ஒருவர் ஒருவித நம்பிக்கை கொள்வாரேயானால் பூரண உணர்வு இருக்க முடியாது. நீங்கள் பூரண வாழ்க்கை உடையவராகத் திகழுவதைத் தடுப்பது என்ன, ஒரு லட்சியத்தைக் குறித்து உங்கள் மனதைப்பற்றி யூகிக்கும் பிரேமை தடையாகும். எதிர் காலத்தில் காரியசித்தியடைய வேண்டுமென்று நீங்கள் எதிர்

போர்த்த வண்ணமாகவே இருக்கிறீர்கள். ஆகவே தான் மரண பயம் ஏற்படுகிறது.

ஆலயப் பிரவேசம்

கேள்வி:— இந்தியாவில் மக்களுக்குள் நிலைத்திருக்கும் பலவித வித்தியாசங்களில் ஒன்றைப் போக்க ஆதி இந்துக்கள் ஆலயப் பிரவேசம் உதவியாக விருப்பதால் அந்த சீர்திருத்தத் தைத் தாங்கள் ஆதரிக்கின்றீர்களா?

பதில்:— ஆதிஇந்துக்கள் ஆலயப்பிரவேசம் செய்வதால் ஜாதி வித்தியாச சிக்கல் தீருமென்று நான் கருதவில்லை. கோயில்கள், சர்ச்சுகள் முதலியன இல்லாமற் போனால்தான் ஜாதி வித்தியாசம் ஒழியும். உண்மை, கல்லொன்றிலோ அல்லது விக்கிரகத்திலோ இல்லை. இயற்கை உண்மை எந்த கோயில்களிலுமில்லை. எனவே, கோயிலுக்குச் செல்வோர் செல்லாதவர் இவர்களைப்பற்றி நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?

கோயில் சடங்குகள் வேண்டாம்

நீங்கள், கோயிலிலிருப்பது உண்மையின் அடையாளக் குறியென்று நினைக்கின்றீர்கள். ஆனால் உண்மை எந்த அடையாளக் குறியிலும் அடங்குவதில்லை. கோயில்களும், சடங்குகளும் இல்லாமற் போகுமானால் மக்களுக்குள் சச்சரவு நின்று விடும். சுயநலத்திற்காக பல நூற்றாண்டுகளாக அழுலிலிருக்கும் தேசீயம் அற்றுப்போனால், எப்படி யுத்தமில்லாமற் போகுமோ அப்படியே கோயில்கள், மூட நம்பிக்கைகள், புரோகிதர்கள் இவர்கள் அகன்றால் வித்தியாசமே இருக்காது.

ஜாதி வேற்றுமை ஒழிக.

விவாதத்தின் மூலம் உங்களால்விஷயமான்றைப்போக்க முடியாது.

நாம் அறியாமையை உணருவோமேயானால் மூலகாரணத்தைப் போக்க ஸ்தாபனங்கள் இயல்பாகவே ஏற்படும். நீங்கள் விழிப்படையாவிட்டால் அடிமைகளாகவே யிருக்க வேண்டும். புதிய சடங்குகளையும், புது ஸ்தாபனங்களை

ROJA MUTHIAH,
47, HOSPITAL ROAD
KOTTAIYUR-623 108

உலக சிருஷ்டியும் கட்டுக்கதையும்.

(டாக்டர் C. L. P. அவாயின் M. D.)

இப்பரந்த உலகத்தில் நிலவும் ஜீவராசிகளைப்பற்றிய வரலாறு இரண்டாகும். எல்லா ஜீவராசிகளும் சிறிய கிர்மாணத்திலிருந்து மிகப் பல வேறுபாட்டால் மாறுபடுகின்றன என்பனவற்றை விளக்கும் விஞ்ஞானக் கோட்பாடு ஒன்றும், எல்லாம் ஓர் அற்புத தெய்வீக சக்தியால் திடீரென்று சிருஷ்டிக்கப்பட்டது என்பதை விளக்கும் மதக்கோட்பாடு மற்றொன்றுமாகும். இக்கட்டுரையின் வாயிலாக விஞ்ஞானக் கோட்பாடான பரிணாம வாதத்தைக் குறித்து பரிசீலனை செய்ய விரும்பவில்லை. ஏனெனில் உள்ளது சிறத்தல் என்னும் பரிணாமவாதம் பகுத்தறிவு வாதிகள் அரைகுறையாகவேனும் உணர்ந்ததேயாகும். ஆனால் மதக்கோட்பாட்டைப்பற்றிய வரலாற்றை இன்னும் லட்சக் கணக்கான ஜனங்கள் நம்பிவருவதால், அதனுடைய பூர்வாங்கத்தைப் பரிசீலனை செய்து, அது எவ்வாறு இன்னும் நிலைபெறலாயினது என்பதைக் குறித்து ஆராய்வோம் ஆதிகால மக்கள் அனைவருக்கும் தங்கள் தங்கள் உலக சிருஷ்டி வரலாற்றுக் கதைகள் உண்டு. இதில் யூதர்கள், கிறிஸ்தவர்கள், மகமதியர்கள் எல்லோரும் பங்கிட்டுக்கொள்ளும் விவில்யக் கதையே மிகச் செலாவணியானதாகும். ஹீப்ரு விவில்ய நூலை எழுதுவதற்கு முன் பல்லாயிர வருஷங்களாகப் பல்லோர் நம்பியும் ஏற்படுத்தாதீர்கள். பொது உடமைத் தத்துவம் ஏற்படுமானால் தேசத்திலுள்ள கோயில்களையெலாம் ஒழித்துவிடும். ஆனால் மூலகாரணம் ஒழியமாட்டாது. மகத்தான மாறுதல் ஏற்பட வேண்டும். நீங்கள் உங்களது பெற்றோர்கள், சமூகத்தார் இவர்களையும் எதிர்த்து உறுதியுடனிருந்து ஜாதி வேற்றுமை என்னும் விஷயத்தை நாசஞ் செய்ய வேண்டும்.

வந்த ஓர் பழைய பாபிலோனியக் கட்டுக் கதையினின்றே, இவர்கள் எல்லோரும் காப்பியடித்துக்கொண்டார்கள்.

விவில்ய நூலை நுட்பமாகப் படித்துப் பார்ப்பவர்கள், அது ஆக்கப்பட்ட அக்காலத்திலேயே ஆசியா மைனரில் உலக சிருஷ்டி வரலாற்றைக் குறித்து இருநிறப்பட்ட கதைகள் நிலவியிருந்தன என்பதை உணரலாம். இந்த இரு கதைகளையும் வெளிப்படுத்துவது ஆதியாகமமாகும். இந்தக்கட்டுக்கதைகளின் கடைமுறைப் போக்கே இருசாராரர்கள் எழுதினார்களென்பதை மெய்ப்பிக்கும். விவில்ய நூல் மேதைகள் இதை "இலோஹிஸ்டிக்" என்றும் "எஹோவிஸ்டிக்" என்றும் முறையே அழைக்கின்றார்கள். முதலாவது அதாவது எலோகிஸ்டிக் வரலாறானது ஆதியாகமத்தின் முதல் அதிகாரத்தில் ஆரம்பிக்கப்பட்டு இரண்டாவது அதிகாரத்தின் மூன்றாவது செய்யுளோடு முடிவடைகிறது. இரண்டாவது அதாவது எஹோவிஸ்டிக் வரலாறானது ஆதியாகமத்தின் இரண்டாவது அதிகாரத்தின் நான்காவது செய்யுளிலிருந்து ஆரம்பித்து மூன்றாவது அதிகாரத்தின் 24-வது செய்யுள் வரை நீண்டிருக்கிறது. இந்த இரு வரலாறுகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ள பெயர் காரண இடுகுறியாகும்.

அதாவது பரவஸ்துவைப்பற்றி முதல் நூலில் இலோஹிம் என்றும் இரண்டாவது நூலில் எஹோவா என்றும் கூறியிருத்தலேயாம். இலோஹிம் என்பது ஹிப்ரு வார்த்தை. அதுவே எஹோவா. இதனுடைய நேர் பொருள் "கடவுளர்கள்". இது இன்றைய விவில்ய நூலில் "கடவுள்" என இடம் பெற்றிருக்கிறது. எஹோவா என்பதற்கு நேரடியான அர்த்தம் "கடவுளர்களுக்கும் கடவுள்" என்பதாகும். இலோஹிஸ்டிக், எஹோவிஸ்டிக் ஆகிய இரண்டிலும் நிலம் பயிர், ஜீவராசி, மனிதவர்க்கம் முதலிய தோற்றத்தைக் குறித்த வேறுபாடுகள் முதலியன கீழே காட்டியுள்ள ஏன் ஜிலிகன் சர்ச்சின் மிகப் பிரக்யாதிபெற்ற வேதாந்தி பிஷப் ஜான்வில்லியம் கொலென்ஸோ அவர்களின் குறிப்பிலிருந்து தெரியவரும் (கொலென்ஸோ அறுபது ஆண்டுகளுக்கு முன்பு நெட்டால் பிஷப்பாக இருந்தவர். பைபிளைத் தக்க ஆதார பூர்வமாகக் கண்டனவாதம் செய்ததற்காக குற்றஞ் சாட்டப் பட்டவர்.)

மேற்கூறிய இரண்டு முறைகளிலும் உள்ள குறிப்பிடத் தகுந்த இரண்டு வேறுபாடுள்ள விஷயங்கள் வருமாறு:—

1. முதல் நூலில் நீரிலிருந்து நிலம் வெளிப்பட்டது. ஆகையினால் ஈரம் எங்கும் வியாபகமாயிருந்தது. இரண்டாவதில் நிலப்பரப்பு பூராவும் ஈரம் ஆக்கப்பட வேண்டியிருந்தது.

2. முதல் நூலில் மனிதனுக்கு முன் பக்ஷிகளும், பிராணிகளும் சிருஷ்டிக்கப்பட்டன. இரண்டாவதில் பக்ஷிகளுக்கும், பிராணிகளுக்கும் முன் மனிதன் தோன்றலானான்.

3. முதல் நூலில் பறக்கும் எல்லாப்பறவைகளும் நீரிலிருந்தே உண்டாக்கப்பட்டன. இரண்டாவதில் ஆகாயத்தின் பறவைகள் நிலத்திலிருந்தே உண்டாயின.

4. முதல் நூலில் மனிதன் கடவுளின் பிரதிபிம்பமாகச் சிருஷ்டிக்கப்பட்டான். இரண்டாவதில் நிலத்தின் தூசியிலிருந்து மனிதன் தோற்றுவிக்கப்பட்டான். பின் உயிர் மூச்சினால் உயிர்ப்புப் பெற்றான். தடுக்கப்பட்ட பழத்தைப் புசித்த பின்னரே "நம்மைப்போல் நன்மை தீமையை அறியமனிதன் ஆகிவிட்டான் பார் என்றார் நம் பிதா கடவுள்."

5. முதல் நூலில் பூமி முழுமைக்கும் மனிதன்ளஜமானனாக்கப்பட்டான். இரண்டாவதில் அவன் ஒழுங்கு படுத்தவும், பத்திரப்படுத்தவும் ஈடன் தோட்டத்திலே சும்மா வைக்கப்பட்டான்.

6. முதல் நூலில் ஆணும் பெண்ணும் சேர்ந்து சிருஷ்டிக்கப்பட்டார்கள். முழு சிருஷ்டியின் பூர்ணத்துவமாக ஏற்படுவதால் ஒருவருக் கொருவர் பரிபூரணமாக இவர்கள் இருவரும் சேர்ந்து ஆசீர்வதிக்கப் பட்டார்கள். இரண்டாவதில், ஆணுக்கும் பெண்ணுக்கும் மத்தியில் மிருகங்களும், பக்ஷிகளும் சிருஷ்டிக்கப்பட்டன. முதலில் நிலத்தின் தூசியிலிருந்து மனிதன் செய்விக்கப்பட்டான்; இவன் அவனாலேயே தோட்டத்திலுள்ளே வைக்கப்பட்டான் .பரிசுத்தக் கட்டளையால் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டான்; அதை மீறினால்சாபக்கேடு என்பதால் பயமுறுத்தப்பட்டான்; பின்னரே விலங்குகளும், பக்ஷிகளும் சிருஷ்டிக்கப்பட்டன. மனிதன் அவைகளுக்குப் பெயரிடுகின்றான். கடைசியாக இதற்கெல்லாம் இறுதியாக

அவனுடைய விலா எலும்பிலிருந்து பெண் சிருஷ்டிக்கப்படுகின்றாள். அதுவும் மனிதனுக்கு வெறும் கூட்டாளியாக இருக்கவேயாம்.

இந்த ஹீப்ரு ஈடன் கட்டுக் கதைகளில், சுதாவாக எதுவும் உண்மையில்லை என்பதை மறுதளிக்க எந்த வேறுபாடுகொண்ட பொது ஜன அபிப்பிராயமுமில்லை. இது போன்ற கட்டுக் கதைகள் கற்பனை வரலாறுகள் எல்லாம் ஹீப்ருக்களுக்கு எந்த தெய்வீக நூலாலும் தெரியப்படுவதற்கு நூறு நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உலகம் பூராவும் பேசப்பட்டு வந்திருக்கிறது. சால்டியா, பொனீயா, பாபிலோன், இந்தியா, பெர்சியா, சைனா, ஈஜிப்ட், மெக்சிகோ முதலிய பாகங்களிலும் இவைகள் பிரசித்தம். இந்தக் கதைகளோடு முதன் முதல் சம்மந்தங்கொண்டவர்கள் ஹீப்ருக்கள். அதுவும் (722, 705, கி. மு.) ஆசிரிய அரசர் இரண்டாவது சார்கன், இஸ்ரவேல்காரர்களை ஜெயித்து அடிமைப்படுத்திய பொழுதாகும். கிறிஸ்து பிறப்பதற்கு 1500, 2000 வருஷங்களுக்கு முன்பே சிருஷ்டிவரலாறு வீழ்ச்சி வரலாறு முதலிய கதைகளும் ஜலப்பிரளய சம்பவம் பாபெல் கோபுரத்தைப்பற்றியும் வழங்கப்பட்டிருக்கின்றனவென்று 1573, 74 வருஷங்களில் மெசபெடோமியாவில் பிரிட்டிஷ் மியூசியத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஜியார் ஸ்மித் கண்டுபிடித்துள்ளார். பென்சல் வேனியா சர்வகலாசாலையின் உதவி ஆசிரியர் டாக்டர் எட்வர்ட்சிரா அவர்களின் கண்டு பிடிப்பினால் ஹீப்ருக்களின் சில கட்டுக்கதைகளுடைய பாபிலோனிய பூர்வாங்கத்தின் புதிய உண்மைகள் புலனாகின்றனவென்று 1932-வருஷ ஏப்ரல் மாதத்திய The New York Trnth-Seeker கூறுகிறது. (இந்தக்கட்டுக்கதைகளை பாபிலோனியர்களிடமிருந்து ஹீப்ருக்கள் காப்பியடிக்கவில்லையென்று அநேக கிறிஸ்துவ பாதிரிகள், குறிப்பாக கத்தோலிக்கர்கள் மறுதளிக்கலாம். அவர்களுடைய அபிப்பிராயத்தை மெய்ப்பிக்க அப்படி இருக்க முடியாது, என்கிற நம்பிக்கையைத் தவிர்த்து வேறு எதைக்கொண்டும் நிரூபிக்க முடியாது.) டாக்டர் சிராவின் நூதனம் சுமேரியன் பாழையில் செதுக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துக்கு முன் 2100, 2500-வருஷங்களில் எழுத்துக்கள் களிமண்ணில் தோண்டி எடுத்து செதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த செதுக்கலானது இதற்கு

முன்னதான ஒரு பழைய ஆதியைக் கொண்டது. அதுவும் கிறிஸ்து பிறப்பதற்கு 4000வருஷங்களுக்கு முன்னையதான தைப் பார்த்து காப்பி செய்ததாகும் என நினைக்கப்படுகிறது. ஆதி பாபிலோனிய ஈடன் கட்டுக்கதையில் கடவுளர்களுக்குள் ஒரு பெரும் போராட்டம் நிகழ்ந்த வரலாறு கூறப்பட்டிருக்கிறது. அதன்படி மனிதன் சிருஷ்டிக்கப்பட வேண்டுமா? இல்லையா என்பதைக் குறித்து அவர்களால் முடிவுகட்ட முடியவே இல்லை. ஒரு "புத்திசாலி" ஊர்வன, கிழடடைந்த சிறகுகொண்ட பாம்பான, Taimat ஆகியது மனித வர்க்கத்தின் சிருஷ்டியை எதிர்த்தது. பெரியகடவுளான ("பல்" போடு பறவைப்பாம்புபோராடியது. இறுதியாக அவன் மீது இடியை உருட்டிவிட்டு கடவுள் வெற்றிகொண்டார். எதிர்ப்புகள் எல்லாம் நசுக்கப்பட்டதனால் மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான். பெல்லுக்கும் பறவைப்பாம்புக்குமுண்டான போராட்டம் "அபோகாலிப்ஸி" யால் குறிப்பிட்டுள்ள சுவர்க்கத்தில் நடந்த புரட்சிக்கதைக்கு நெருங்கிய நேர் ஒற்றுமையாக இருக்கிறது.

"சுவர்க்கத்தில் ஒரு சண்டை நடந்தது. மைகேலும் அவனுடைய தேவதைகளும் பறவைப்பாம்போடு போராடினர்; பறவைப் பாம்பு அவனுடைய தேவதைகளோடு போராடியது.

"யாரும் இதில் இடம்பெறவில்லை, சுவர்க்கத்தில் இனி மேல் இவரிருவருக்கும் இடம் காணப்படவில்லை. பெரிய பறவைப்பாம்பு வீழ்த்தப்பட்டது; பைசாசு என்று அழைக்கப்படுகிற அந்தக்கிழப்பாம்பு—உலகத்தைப் பிரித்து வைக்கும் சைத்தான், பூமியில் வீசி எறியப்பெற்றது. அவனுடைய தேவதைகளும் அவனின்றும் வீழ்த்தப்பட்டனர்"

(Revelation xii, 7, 9)

சுவர்க்க ராஜ்யத்தில் கடவுளும் தேவன்களும் ஒருபுறம், பைசாசுகளும் அதனுடைய திருக்கூட்டமும் மற்றொருபுறம் போராடுவதுதான் பழைய பர்சிய மதத்தில் நாம் காணும் மிக முக்கிய தத்துவமாகும். கடவுளர்களுக்கு அடிக்கடி போராட்டம் நிகழ்ந்து வந்திருக்கின்றனவென்றே கிரேக்கர்களும் ரோமர்களும் நம்பினர். மெக்சிகர்கள் இவ்விதம் நம்பினார்களென்று இஜிப்தியர்களும் நம்பினார்கள். வெளிச்சத்திற்கும் இருட்டிற்கும் சக்திகள் உண்டாம், இந்த சக்திகளுக்குள் கடுமையான போராட்டங்களாம்; இதுவே ஜொராஸ்டிரியன் மதத்தின் தத்துவம்.

———

ரஷ்யாவில் சிறுவர்கள்.

(தோழர் கபிலகந்துவாலா.)

கடந்த மகாயுத்தமானது ரஷ்யாவின் சமூக வாழ்க்கை நிலையிலும் பொருளாதார நிலையிலும் ஒரு பெரிய மாற்றத்தை அல்லது பெரும் புரட்சியை உண்டுபண்ணி விட்டது. அதன் பயனாக அங்கு ஒரு புரட்சியும் உள்நாட்டு யுத்தமும் ஏற்பட்டு நாடு கொந்தளித்து 1921-22ல் ஏற்பட்ட பஞ்சத்தால் முடிவு பெற்று, என்றும் யாவரும் எதிர்பாராத அளவுக்கு நாடு விருத்தியடையலாயிற்று. புரட்சி நடந்து 4, 5 வருடங்கள் கடந்தபின்தான் சோவியத் சர்க்கார் உருப்படியான காரியங்கள் அதாவது ஆக்கவேலைகள் செய்ய முடிந்தது. அப்பொழுதுதான் கல்வியைப்பற்றியும் கவனிக்க முடிந்தது. ஜாதிமத பாகுபாடு இல்லாமல் உயர்வு தாழ்வு இல்லாமல் எக்குலத்தவரானாலும் விதியாசமில்லாமல் எல்லோருக்கும் கல்வி இலவசமாகக் கற்பிக்கப்படவேண்டும் என்றும் கல்வி, பொதுவென்றும் போல்ஷிவிக் சர்க்கார் விதியொன்று முதல் முதலில் கல்வியில் செய்தார்கள்.

ஒரு நாட்டின் பொருளாதார நிலைமையினையே அந்நாட்டின் கல்வியின் முறையும் நிலையும் சார்ந்திருக்கின்றன. இந்த உண்மையை நாம் முதலாவது அறிந்துகொண்டால்தான் சோவியத் சர்க்காரின் கல்வியில் பொதிந்து கிடக்கும் உண்மையையும் விசேஷத்தையும் அறிய முடியும் ("அவனவன் சக்திக்குத் தகுந்தவாறு உழைப்பதும் அவனவன் தேவைக்குத்தகுந்தபடி பெறுவதும்" என்பதுதான் சோவிடத் தத்துவம்).

பல சோதனைகள் செய்து பார்த்து கடைசியாகக் கல்வியில் ஓர் ஐக்கிய முறையை சோவியத் நாட்டில் எங்கும் ஒரே விதமான முறையைக் கையாளும்படியாக சோவியத் சர்க்கார் தோற்றுவித்திருக்கிறார்கள். அக்கல்வியின் கொள்கையும், நோக்கமும் மிக சாமான்யமானதுதான். ஒன்றும் பிரமாதமானதல்ல. கல்வியின் ஒவ்வொரு படியிலும் மனிதனை

சுயமரியாதையுடனும் சுதந்தரத்துடனும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு காரியத்தைச் செய்யவைக்கவேண்டுவதே அக்கல்வியின் பிரதானமான லட்சியம். இக்கட்டுரையில் அந்நாட்டின் கல்வியின் எல்லாப் பிரிவுகளைப்பற்றியும் நான் கூறப்போவதில்லை. ஆனால் அங்கு பள்ளிக்குப்போவதற்குமுன் சிறுவர்கள் எவ்வாறு பழக்கப்பட்டும் கற்பிக்கப்பட்டும் வருகிறார்கள் என்பதையே இங்கு விளக்கிக்காட்டுகிறேன்.

மூன்று வயதுவரை சிறுவர்கள், சிறுவர்கள் விடுதிகளிலோ அல்லது அதுபோன்ற ஸ்தாபனங்களிலோ வைக்கப்பட்டு வருகிறார்கள். அங்கு கிண்டர்கார்டன் பள்ளிக்கூடங்களோ அல்லது சிசுசம்ரக்ஷணைப் பள்ளிக்கூடங்களோ இருக்கின்றன. இப்பள்ளிக்கூடங்களில் பெற்றோர்கள் வேலை செய்யும் நேரங்களில் 3 முதல் 8 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இருந்து வருகிறார்கள். இப்பள்ளிக்கூடங்கள் வருடம் 365 நாட்களும் திறந்தே இருக்கும். ஒரு நாளும் மூடப்படாது. கோடைகாலத்தில் சிறுவர்கள் ஓடியாடி விளையாட விளையாட்டு மைதானங்கள் இருக்கின்றன. இப்பருவம் கடந்த பின் 8 முதல் 10 வயதிற்குட்பட்டவர்களை முதலில் கூறிய ஆரம்பக்கல்வி அதாவது பள்ளிக்கூட படிப்புக்குமுன் கற்பிக்கப்படும் படிப்பு 10 வருடங்கள் வரை பொது அறிவைப்பற்றிக் கற்பிக்கப்படும்படியான முறையில் சோவியத் சர்க்கார் கல்வியின் விதியை மாற்றி அமைத்திருக்கிறார்கள். இப்பருவம் கடந்தபின் வாலிபர்களும் முதியோர்களும் உயர்ந்த கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அங்கு 4, 5 வருடங்கள் வரை கற்கிறார்கள். கல்வி சம்பந்தமாக உள்ள ஸ்தாபனங்கள் முழுவதும் விஞ்ஞான ஆராய்ச்சியை யொட்டியதும் அரசியலை யொட்டியதுமான கல்வியாகத்தான் இருந்து வருகின்றன.

பள்ளிக்கூடம் போவதற்குமுன் கல்வி என்று சொல்லுவதில் பிறந்தது முதல் 7 வயது வரையுள்ள குழந்தைகளின் நிரோக சுகத்தைப்பற்றிய கவலையும் அத்திட்டத்தில் அடங்கி இருக்கிறது. அதிலும் பிறந்தது முதல் 4 வயது வரைக்குட்பட்ட பாலர்களின் உடல் வளர்ச்சியைப்பற்றியும் அதன் அமைப்பைப்பற்றியும்தான் அதிகமாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. அதனால்தான் இப்பொறுப்பை சுகாதார இலாக்காவாகிய 'ரஸ்து இலாகா'வின் பொறுப்பில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. சிறுவர்கள் சிறு குழந்தைகளின் விடுதிகளுக்கு அனுப்பப்படுகிறார்கள் என்றால் அதுவும் அக்குழந்தைகளின் பிரியத்திற்கு

இணங்கியேயாகும். எதிலும் நிர்ப்பந்தமில்லை. விளையாட்டு விடுதிகளை விட்டபின் சிசுசம்ரக்ஷணை சாலையில் சேர்க்கப் படுகிறார்கள். இச்சாலைகள் கல்வியிலாகா "கல்விக்குரிய ரஸ்து இலாகா"வின் பொறுப்பில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது.

புரட்சிக்குமுன் அங்காட்டில் இருந்து வந்த கிண்டர் கார்டன் பள்ளிகளும், சிசுசம்ரக்ஷணைசாலைகளும் ஒருவன் விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய அளவிற்குத்தான் இருந்துவந்தன. அவைகளைக்கூட தனிப்பட்ட மனிதர்கள் ஏதோ தர்ம சிந்தையுடன் சொந்தமாக நடத்திவந்தார்கள். அந்தப்பள்ளிக் கூடங்களில் 8 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு சர்க்கார் உதவி அளிப்பதே கிடையாது. ஆகவே அப்பள்ளிகளில் பணக்காரர் களுடைய பிள்ளைகள் மட்டும் சேர்க்கப்பட்டும் கற்பிக்கப்பட் டும் வந்தார்கள். பாட்டாளிகளுடைய-உழைப்பாளிகளுடைய, விவசாயிகளுடைய சிறுவர்களுக்கு—பாலர்களுக்கு—பச்சிளங் குழந்தைகளுக்கு அப்பள்ளிகளில் இடங்கிடையாது. கவனிப்பதுமில்லை. இதனால்தான் சிறுவர்கள் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முன் எவ்வாறு காப்பாற்றப் படவேண்டியதென்றும் எவ்வாறு கல்வி கற்பிக் கப்பட வேண்டியதென்றும் கவனிக்கவேண்டிய அவசியம் சோவியத் சர்க்காரின் தலையில் முதல் கடமையாகவிழுந்தது. தங்க இடமில்லாத, வீடு வாசல் அற்ற கணக்கற்ற சிறுவர் கள் மக்களுக்கு பெரிய தொல்லையையும், கவலையையும் விளைவித்து வந்தார்கள். அந்தச் சிறுவர்கள் நாட்டில் தொல்லையையும் பயங்கரத்தையும் கொடுக்கக் கூடிய கொள் ளை நோயை பரவச் செய்யக் கூடியவர்கள் ஆகவும் குற்ற வாளிகளாகவும் ஆகக் கூடியவர்கள் என்றும் பொது மக்கள் அஞ்சலானார்கள். இந்த பிரச்சினையைத் தீர்த்து வைப்பத ற்கு அப்பொழுது இருந்த சர்க்காருக்குப்போதுமான அவகாச மில்லாதிருந்தது. அப்படியிருந்தும் சில மனோதத்துவ சாஸ்திரிகளையும் கற்றறிந்த அறிஞர்களையும் கொண்ட "குழந்தைகளின் நண்பர்களின் சங்கம்" ஒன்று ஆரம்பிக்கப் பட்டது. அவர்களது பொறுப்பு மிகப் பெரியதாயிருந்தது. அவர்கள் அப்பிரச்சினையை தீர்த்துவைக்க முற்படுகையில் பலவிதமான தடைகளை எடுத்தெரிய வேண்டியதாயிருந்தது. அவர்கள் முன் தோன்றிய கஷ்டங்கள் பல. கல்விகற்பிக்க கூடிய பயிற்சிபெற்ற ஆசிரியர்களும் ஊழியர்களும் மிகக் குறைவாகவே இருந்து வந்தார்கள் பல ஸ்தாபனங்களில் அநேகமாக பயிற்சியில்லாத ஊழியர்களைக் கொண்ட

காரியங்களை நடத்தி வரவேண்டியிருந்தது. முதலில் சிறுவர்களை பரிபாலிக்கும் விதத்தைப்பற்றியும் கல்வி கற்பிக்கும் விதத்தைப்பற்றியும் அதன் அவசியத்தைப்பற்றியும் சிறு சிறு தாள்களாகப் பிரசுரித்து வந்தார்கள். இம் முறையானது ஏறக்குறைய பொருளாதார சீர்திருத்தம் ஏற்படும் வரையில் அதாவது 1921-22 வரையில் இருந்து வந்ததென்றே சொல்லலாம்.

இச் சமயந்தான் பொருளாதார புனர் நிர்மாணம் செய்யப்பட்ட காலம் அல்லது பருவம் என்பது ஆகும்.

சோவியத் சர்க்கார் பெண்களுக்கு பூர்ண சுதந்திரம் அளித்திருக்கிறார்கள்; சமத்துவ மளித்திருக்கிறார்கள். பெண்களைக் குறித்து எவரும் எந்த விதமான அபிப்பிராய மோ தீர்ப்போ சொல்லவோ தெரிவிக்கவோ அனுமதிக்கப் படுவதில்லை. ஆண்களோடு பெண்களும் சரிசமமாகத் தொழில் செய்யத்தக்க வசதியளிக்கப்பட்டிருக்கிறது.

பெண்களின் பிரசவ காலத்திற்கு முன்னும் பின்னும் 2 மாத காலத்திற்கு விடுமுறை முழுச் சம்பளத்துடன் அளிக்கப்பட்டு வந்தது. அதனால் தான் இன்றுதொழிற்சாலைகளில் ஏராளமான பெண்கள் இருந்து பணியாற்றி வருகிறார்கள். இதனாலும் பள்ளிக்குப் போவதற்கு முன் சிறுவர்களைக் கவனிக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தலாயிற்று. "நாம் சுகம்பெற வாழவும், சுதந்திரத்துடன் வாழவும் எதிர்கால இளஞ் சிங்கங்களை பலி செய்வது என்பது அறிவுக்கு பொருந்தாதது ஆகும்". ஆதலால்தான் சிறுவர்கள் க்ஷேமத்தை மிகமுக்கியமானதாகக்கருதி தனித்து அல்லது சுயமாக நடத்தி வந்த கல்வி ஸ்தாபனத்தை சர்க்கார் தனது ஆதிக்கத்தில் சேர்த்துக் கொண்டார்கள். கிண்டர் கார்டன் விடுதிகளும் சிசுசம்ரக்ஷணைச்சாலைகளும் பலநிறுவ ஆரம்பித்தார்கள். ஆரம்பத்தில் பாலர்கள் கண்காணிப்பு விடுதிகளை ஏற்படுத்துவதில் அதிக கவனத்தைச் சர்க்கார் செலுத்திவந்தார்கள்; ஆனால் வரவர அதைக் கைவிடவேண்டியதாயிற்று. அவ்வாறு செய்வதற்குப் போதிய கட்டிடங்களும், உபகரணங்களும் அதிலும் ஆசிரியர்களும் இல்லாததேயாகும். இப்பிரச்சினையைவிட மிக மிக அவசியமானதும் முக்கியமானதுமான பல பிரச்சினைகள் சர்க்கார்கவனத்தை இழுத்து வந்தன என்பதையும் அச்சமயம் பொருளாதார

கெருக்கடியதிகமாயிருந்து வந்தது என்பதையும் ஒருவரும் இச்சமயம் மறந்துவிடக்கூடாது என்பதே எனது ஆசை. ஆகவே சிறுவர்களின் ஆரம்ப வாழ்க்கையின் கல்வியைவிட பிற்கால வாழ்க்கையின் கல்வியாகிய செகண்டரி கல்வியைப் பற்றி சர்க்கார் அதிக கவனம் செலுத்தவேண்டியதாயிற்று. புதிய சட்டத்தின் கீழ் பெண்கள் பெற்ற சுதந்திரமும் முன்னேற்றமும் இப்பிரச்சினைக்கு மிக உதவி செய்யலாயிற்று. சிசுக்கள் பாராமரிப்பு சங்கங்கள் பல பெண்களால் காணப் பெற்றன. இயந்திர சாலைகளிலும் வேலை செய்யும் கழக்கங்களிலும் சிசுக்களுக்கென தனியாக ஒரு அறை ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கு வேலை செய்துவரும் பெண்களேசிசுக்களைக் கவனிக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருந்தார்கள். பின்னால் பயிற்சி பெற்ற சேவையாளர்கள் தேவை என்பதை உணரத் தலைப்பட்டார்கள். அரசியல் விவகாரங்களிலும் பொதுக் காரியங்களிலும் அதிக சிரத்தையும் அவாவும் சுறுசுறுப்புள்ள ஐந்துபேர்களுக்கு 8-நாள் அகோர பயிற்சியளிக்கப்பட்டது. சிறிது காலம் கழிந்ததும் இது போன்ற மற்றொரு கூட்டம் பயிற்சியளிக்கப்பட்டது. அதன் பின் முதலில் வெளியேறின கூட்டத்தாருக்கு 3 மாத காலத்திற்குரிய ஒரு கோர்ஸ் அளிக்கப்பட்டது. வழியர்களில் பெரும்பாலும் தாய்மார்களாகவே இருந்து வந்தார்கள். இந்நிலைமை தான் 1928-29 வரை இருந்து வந்ததாகும். ஆனால் இன்று அவர்களைஉலகமேபோற்றவும், என்உலகமே அங்கு சென்று அவர்கள் அனுசரிக்கும் முறைகளையும் அவர்களது திறமையையும் கண்டுகளிக்கவும் அதனைக் கற்று தம் நாட்டிலும் அவ்வாறுசெய்யவும் நாள்தோறும் போய்க்கொண்டும இருக்கிறார்கள்.

குழந்தைகளைப் பெற்றவுடன் பெற்றோர்களிடமிருந்து பிரித்து வருகிறார்களே என்ற எண்ணம் மக்களிடையே இருந்து வருகிறது. இது முற்றிலும் தப்பானதும் பொய்யானதுமான விஷயமாகும். சோவியத் சர்க்காரின் தத்துவத்துக்கும் குடும்பத்தின் சுகத்தை கெடுக்கும் எண்ணத்திற்கும் எனி வைத்தாலும் எட்டாது. இல்லற வாழ்க்கையை வெறுக்கச் செய்ய வேண்டுமென்ற எண்ணமே அவர்களிடத்தில் இல்லை. நான் இதைப்பற்றி தோழர் கருப்ஸ்கயா என்பவரோடு பேசிக் கொண்டிருக்கையில் "குழந்தைகளிடத்தில் காட்டவேண்டிய பெற்றோர்களின் வாஞ்சை எந்த காலத்திலும் தடுக்கப்பட

மாட்டாது, அப்படியே தடுக்கப்பட்டாலும் அந்த உணர்ச்சி வேறுவித பெற்றோர்களிடத்தில் தோன்றி முன்னைவிட அதிக பலமாக இருந்து கொண்டு பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் பேரின்பத்தையே விளைவிக்கக்கூடியதா யிருக்கும்.——சோஷியலிஸ்டு காமன்வெல்த்தில் குழந்தை களை பராமரிக்கு முறையில் மிகக்கவனம் செலுத்தப்படு வதோடு ஆசிரியர்களோடு பெற்றோர்களும் அதிகபங்கு எடுத்துக்கொள்ளுவார்கள்" எனக் கூறினார்.

பெற்றோர்கள் குழந்தைகளை சரியாகக் கவனிக்காமல் கொடுமையாக நடத்துவதாகவோ அல்லது அவைகளைப் பற்றி கவலையீனமாக இருந்து வருவதாகவோ சர்க்கார் கண் டால் அல்லாமல் குழந்தைகளைப்பற்றிய விஷயங்களில் தலை யிடுவதில்லை. ஒவ்வொரு குழந்தைகளையும் பிறந்தவுடன் கிண்டர் கார்டன் விடுதிக்கோ சிசுசம்ரக்ஷனைச் சாலைக்கோ அனுப்ப வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஆனால் அந் நாட்டின் நிலைமை சிசுக்களை மேல் கண்ட விடுதிகளுக்கு அனுப்பவேண்டியதற்கு சாதகமாகவே இருந்து வருகிறது. எனெனில் அங்கு தகுந்த பயிற்சி பெற்ற நர்சுகளும் செவிலி மார்களும் இருந்து வருவதால் நமது வீட்டில் வேலைக்காரர் களும் கிழவிகளும் குழந்தைகளைக்கவனிப்பதைவிட எவ்வள வோ மேலாக அவர்கள் கவனித்து வருவார்கள். குழந்தை களுக்கு குணவிருத்தி ஏற்படுவதற்கு முக்கிய எதுவாயிருப் பது சுற்றுப்புற அமைப்பு என்பதாகும். இதை நோக்கும் போது சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனங்களில் கேரிய முறையில் சுற்றுப்புற அமைப்புகள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. பகல் காலத்தில் வேலைக்குப் போகும் தாய் மார்களுக்கு தம் பிள்ளைகளைப்பற்றிய கவலையை ஒழித்து விட்டது. அவர்களின் குழந்தைகள் தக்கபடி பாதுகாக்கப் பட்டு வருகின்றன. இதனால் தாய் சந்தோஷமாகவும் மன நிம்மதியோடும் தன் வேலையை கவனிக்க முடிகிறது. சர்க் கார் சிறுவர்களின் விடுதிகளைக்குறித்து எவ்வளவோ பிரசா ரங்கள் செய்து வருகிறார்கள். அப்படி யிருந்தும் எத்தனை யோ பெற்றோர்கள் தம் குழந்தைகளை மேல்கண்ட ஸ்தா பனங்களுக்கு அனுப்பாமலிருந்து வருகிறார்கள்.

குழந்தைகளை கவனிப்பதற்குப்போதுமான அவகாசம் தாய்மார்களுக்கு இருப்பதில்லையென்று சொல்லுவதெல் லாம் சுத்தப்பொய். ஏனெனில் அந்நாட்டில் வேலை செய்யும்

நேரம் குறைவாகவே இருந்து வருகிறது. இனியும் குறைக்கப்படும் என்பதாகவும் தெரிய வருகிறது. ஆகவே தாய்மார்களுக்குப் பிள்ளைகளிடத்தில் பகற்பொழுதில் கொஞ்சி விளையாட நேரம் போதுமான அளவுக்கு இருந்து வருகிறது. மேலும் வேலை செய்யும்பொழுது தாயும் சேயும் சேர்ந்தே யிருக்க வேண்டும் என்பதை அறிவுள்ள எவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆகவே, சிசுசம்ரக்ஷணை சாலைகள் ஏற்படுத்துவதிலும், கிண்டர் கார்டன் சிறுவர் விடுதிகள் ஏற்படுத்துவதிலும் பொதிந்து கிடக்கும் உண்மை என்னவென்றால் பெண்கள் பூர்ண சுதந்திரமடைவதும், அவர்களின் உரிமை வளர்ச்சி பெறுவதும், குழந்தைகள் தாராள சிந்தையுடனும் பராதீனப்படுத்தக்கூடாத சுதந்திரத்துடனும் வளரவும் செய்கிறதாகும் என்பதே. குழந்தைகள் பூர்ண மனிதனாகவும் சிறந்தவர்களாகவும் வளர்க்கப்பட வேண்டுமானால் ஒவ்வொரு நாளிலும் பகல் பொழுதில் சிறிது நேரமாவது கூட்டமாக அதாவது கூட்டாளிகளுடன் சேர்ந்து விளையாட வேண்டியது அவசியம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

சோவியத்தில் கற்பிக்கப்படும் ஆரம்பக்கல்வியில் 3 முக்கிய லக்ஷணங்கள் இருக்கின்றன. அந்த லக்ஷணங்களை நாம் எந்நாட்டிலும் கல்வியில் காண்பது அரிது; ஏன் இல்லை என்றே சொல்லிவிடலாம். முதல் லக்ஷணமாவது விஞ்ஞான ரீதியாகப் பொருள் உற்பத்தி செய்யும் முறையை குழந்தைகளுக்கு அறிவிக்கும் அறிவு என்பது ஆகும். அதே சமயத்தில் சிறுவர்களும் இளைஞர்களும் சாதாரணக் கருவிகளையும், ஆயுதங்களையும்உபயோகிக்கும் விதத்தையும் கற்றுக்கொள்ளுகிறார்கள். நான்கு அல்லது ஐந்து வயது பாலர்கள் ஐந்தாண்டுத்திட்டத்தை விளையாட்டின் மூலமாகவே கற்றுக்கொள்ளுகிறார்கள். ஆறு அல்லது ஏழுவயதுடைய குழந்தைகள் உளி முதலிய ஆயுதங்களைக் கொண்டு சரியாக எப்படி வேலை செய்வது என்பதைக் கற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனால் நாமோ வெனில் அவ்வயதுடைய சிறுவர்களை ஆயுதங்களைத் தொடுவதற்குக்கூட அனுமதிப்பதில்லை. அவர்கள் அவ்வாறு ஆயுதங்களைக்கையாளுவதால் எந்த விதமானஅச்சத்தையும் அடைவதில்லை.

இரண்டாவது லட்சணம் ஒன்றாகச் சேர்ந்து விவசாயம் செய்வதும் கூட்டாகக் காரியங்களை செய்வதும் ஆன மனப்

பான்மையை உண்டுபண்ணுவது. உலகத்தில் ஒவ்வொருவனும் தனித்தனியாகச்சுகமாக வாழ்வதற்கான முறையும் அவனவன் திருப்தியுடனிருக்கும் மார்க்கமுமே பொதுவாகக்கற்பிக்கப்பட்டு வருகிறது. ஆனால் கூட்டாக சகலரும் இன்புறவாழ்வதற்கான முறையை வளர்ப்பதில்லை. அங்கு சிறுவர்களுக்கு ஏராளமான விளையாட்டுகளும் வேலைகளும் இருக்கின்றன. எச்சமயங்களிலும் அவர்கள் கூட்டமாகச் சேர்ந்து இருப்பதற்கும் காரியங்களைச் செய்வதற்கும் பழக்கப்படுகிறார்கள். குழந்தையை தனித்து இருக்க வைக்கவேண்டும் என்பதையும் அவர்கள் மறந்து விடுவதில்லை. அதற்கும் வேண்டிய வசதிகள் செய்து வைத்திருக்கிறார்கள்.

மூன்றாவதாகிய கடைசி லக்ஷணமானது அந்த ஸ்தாபனங்களில் சுய ஆட்சி முறையை சிறுவர்கள் தாங்களாகவே நடத்தும் விதத்தை கற்றுக்கொள்ளுவதேயாகும். குழந்தை தானாகவோ அல்லது மற்றவர்களின் உதவியினாலோ ஏதாவது ஒரு காரியத்தைச் செய்யக்கூடுமானால் அத்தகைய காரியங்களை அவர்களே செய்யும்படியாகப்பழக்கப்படுகிறார்கள். ஒழுங்கையும், அறைகளின் சுத்தத்தையும், விளையாட்டுச் சாமான்களின் பாதுகாப்பைப் பற்றியும், உபகரணங்கள், விளையாடும் மேஜைகள் முதலியவைகளை பொறுப்புடன் வைத்து நடத்தும் விதத்தையும் கண்ணுறும் எவரும் ஆச்சரிய மடையாமல் இருக்க முடியாது. ஐக்கிய சோவியத் அரசாங்கத்தில் குற்றங்களுக்கு சரீர-சம்மந்தமான தண்டனை விதிக்கப்படுகிறது. கூட்டமாக விமர்சனங்கள் கூறுவதாலும் அச்சடித்த தாள்களை சுவர்களில் ஒட்டுவதாலும் மற்றும் பல முறைகளாலும் நாட்டில் நல்லொழுக்கத்தை வளர்க்கிறார்கள். ஒரு குழந்தையைச்சீர்படுத்தக் கையாளப்படும் சாதாரண முறை தவறினால் உடனே சிறுவர்கள் உள்ளத்தாராய்ச்சியாளர்கள் அக்குழந்தையின் வீட்டின் தன்மையையும் அதன் நிலையைப்பற்றியும் விசாரித்து உடனே என்னென்ன காரியங்களில் விருத்தி பண்ண வேண்டுமோ அக்காரியங்களை விருத்தி செய்கிறார்கள்.

தாய்மார்கள் வேலை செய்யப்போயிருக்கும் காலையில் குழந்தைகளின் தேகாரோக்கியத்தைக் கவனித்து திரேக வளர்ச்சிக்கு வேண்டிய வசதிகளை சிசுசம்ரக்ஷணைப்பள்ளி செய்து வருகிறது. சிறுவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஸ்தாபனங்கள் சிறுவர்களுக்கு புலன் பயிற்சியைப்பற்றியும், மன வளர்ச்சிக்குரிய பயிற்சியைப்பற்றியும், மனப்பழக்கத்தைப்பற்றியும் பயிற்சியளித்து வருகின்றன. அங்கு சிறுவர்களுக்கு கல்வி கற்பிக்கும் முறையும் விதமும் தான் ஒருவன் அங்குபோய்

அந்தஸ்தாபனங்களைக் கண்ணுறும் போது ஆச்சரியப்படக் கூடியவிஷயமாகும். மாஸ்கோ பட்டினத்தில் உள்ள சிசுசம் ரக்ஷணை விடுதி குழந்தைகளின் விஷயமாக அதிக கவனம் செலுத்தி வருகிறது. பெற்றோர்களும் சிசுசம்ரக்ஷணை ஸ்தா பகர்களும் ஆசிரியர்களும் பார்த்துத் தெரிந்து கொள்வதற்காக விரிவான தன்மையில் சாதாரணமுறையில் நடத்தக்கூடியமாதிரி சிசுசம்ரக்ஷணைச் சாலைகள் பல நிறுவப்பட்டிருக்கின்றன. அவைகளைப் போய் பார்க்கும் சகலருக்கும் வெகு தெளிவான முறையில் அங்குள்ள விஷயங்களையும் நடக்கும் காரியங்களை யும் விளக்கப் படுகின்றன. மேலும் அங்கு நடைபெறும் காரி யங்களின் ஒழுங்கும் மிகப் பாராட்டத்தக்கதேயாகும். எவ்வ ளவு அற்பகாரியமானாலும் அதற்கும் வெகு கவனம் செலுத்தப் படுகின்றது.

அந்நாட்டில்உள்ளசுகாதாரவிலாக்காவின்டைரக்டர் (மாஸ் கோவிலிருக்கும் டாக்டர் கான்யஸ்) அத்தேசத்தை பலஜில்லாக் களாகப் பிரித்துஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒருடாக்டரையும்ஒரு நர்சையும் ஏற்படுத்தி அவர்கள் பொறுப்பில் அந்த ஜில்லாவின் நான்கு வயதிற்குட்பட்ட சிறுவர்களின் க்ஷேமத்தை ஒப்புவித்தி ருக்கிறார். அவர்கள் அக்காரியத்தை ஆரம்பிக்கும்போது மிகக் கவலையுடனும் போதுமான வசதிகளுடனும் துவக்கு கிறார்கள். ஆபீசில் ஆசிரியர்களுக்கு கற்பிக்கவேண்டிய பிரசங் கங்கள் வியாசங்கள் முதலியவற்றைக் குறித்த திட்டங்களும், அந்தந்த ஜில்லாவின் பிளான்களும், குறிப்புகளும், படங்களும் இருக்கின்றன. சிசுக்கள் பிறப்பதற்கு முன் எந்நிலையில் இருந்து வருகின்றன என்பதைப்பற்றியும் பிறந்த பின் எந்தெந்த நிலையை அடைகின்றன என்பதைப்பற்றியும் அறிவிக்கக் கூடிய கண்காட்சிசாலைகளைபெரிய ஆசிரியர்களும்படிப்புவாசனையில் லாத தாய்மார்களும்கூட அறிந்து விளங்கிக்கொள்ளக் கூடியவித மான அளவுக்கு ஆங்காங்கு நிர்மாணித்து இருக்கிறார்கள். அங்கு வைத்திருக்கும் பொருள்களின் ஒழுங்கு முறையானது சாஸ்திரோக்தமாகவும் மனதின் உள்ளான எண்ணத்திற்குப் பொருந்தியவாறும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஸ்தாபனங்களை நிர்வகிப்பதற்கு ஏற்படும் பணப் பொறுப்பை சர்க்காரோ அல்லது இயந்திர ஆலைகளோ கிளப் புகளோ தனித்தோ அல்லது சேர்ந்தோ ஏற்றுக் கொண்டு காரியத்தை நடத்தி வருகின்றன. இன்று இத்தகைய ஸ்தாபனங்கள் பல அதிகரிக்கப்பட்டிருக்கின்றன- பயிற்சி பெற்ற பலர் இக்காரியங்களைப் பொறுப்புடன் நடத்தி வரு கிறார்கள்.

மதம் விஞ்ஞானத்திற்கு மூட்டுக்கட்டை.

(ஜே. ரீவஸ்.)

விஞ்ஞானத்தின் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் வெகுகாலம்வரை விஞ்ஞானிகள் கண்ட உண்மைகளும் கொள்கைகளும் மதவாதிகளுடைய கூற்றுகளும் முரண்பட்டுக் கொண்டேவந்தன. பலபோர்கள் நிகழ்ந்தன. எத்தனையோ கொலைகள் நடந்தன. பழங்காலத்தில் கிரீஸ் தேசத்தில் சில விஞ்ஞானிகள் வதைக்கப்பட்டதாக கூறப்படுவது உண்டு. ஆனால் அவைகள் அவ்வளவு பிரமாதமானதல்ல. உண்மையிலே விஞ்ஞானிகள் ஐரோப்பியாவில் மட்டுமல்ல, சகல நாடுகளிலும் பல கொடிய ஆக்கினைக்கு எப்பொழுது ஆளானார்கள் என்றால் கிறிஸ்து மதம் தோன்றியதின் பின் அதாவது கிறிஸ்து பிறந்ததிற்கு பின் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் அப்பொழுது தான் உலக சிருஷ்டியைப்பற்றியும் அதில் தோன்றும் ஜீவராசிகளைப்பற்றியும் பழங் கதைகள் வெளிக்கிளம்பின. அக் கதைகளையே மக்கள் நம்பி வந்தார்கள். பகுத்தறிவற்றவர்கள் கூறியஅக்கதையை சர்ச்சு ஒப்புக்கொண்டது. அதன்பயன் என்ன வென்றால், கிறிஸ்துவுக்கு முன் 3 நூற்றாண்டுகள் வரை உலகத்தில் பகுத்தறிவுடைய மக்களும் விஞ்ஞானிகளும் இருந்து வந்ததை மாற்றி கிறிஸ்துவுக்கு பின் மூடர்களும் அஞ்ஞானிகளும், இடம்பெற்று இருக்கச் செய்தது.

1543ல் மனித உடல் கூற்றின் வரலாறு என்பதாக தோழர் வெசாலியஸ் வெளியிட்ட அறிக்கையானது மத்திய காலத்தில் மதக்காரர்களால் விஞ்ஞானிகளுக்குத் தொல்லை ஆரம்பிக்கப்பட்டது. அவர் பெரிய ஆராய்ச்சி ஆளர். அவரது மூப்பதாண்டுக்குள் மனித உற்பத்தியைப் பற்றியும் அவனது உடற் கூற்றைப்பற்றியும் பல குறிப்புகளைக் கண்டுபிடித்தார். காலன் (Galem) என்பவரால் மனிதஉடற்கூற்றின் வரலாறு என்ற

நூலில் இருந்த பலதவறுகளைக் களைந்தார். வெகு பிரயாசைப் பட்டு இன்று நாம் மனித அவயவங்களைப்பற்றிய சாஸ்திரத்தைப் பற்றி எவ்வாறு நினைத்து வருகிறோமோ அந்த அளவிற்கு விஞ்ஞானத்திற்கு ஒத்ததாகச்செய்தார். ஆனால் அவர் ஒரு மதவாதிதான்; பெரிய மதபித்து படித்தவர்தான். அப்படியிருந்தும் மதகிரந்தங்களில் மனிதஉற்பத்தியைப்பற்றி கூறப்பட்டிருக்கும் கொள்கைக்கு விரோதமாக இவரது கூற்று தோன்றியதால் இவர் குற்றஞ் சாட்டப்பட்டு தண்டிக்கப் பட்டுஉயிரிழந்தார். ஆனால் அவரது பிரிவுதான் மிக வருந்தக்கூடியது. ஏனெனில் அவர் புனிதஸ்தலமெனக் கருதப்படுகிற ஏதோ ஒரு 'புண்ணியஸ்தல'த்திற்கு கடல் கடந்து சென்று திரும்பிவரும் பொழுது அவரது கப்பல் உடைக்கப்பட்டு அவர் கடலில் அமிழ்த்திக் கொல்லப்பட்டார். அதற்குப்பின் இரண்டு நூற்றாண்டுகள் கடந்த பிறகு பரிணாமவாதம் தோன்று வரை இத்தகைய சம்பவம் ஏற்படவில்லைஎன்று சொல்லலாம். இச்சமயத்தில் விஞ்ஞானிகளுக்கு உலக முழுவதிலும் எற்பட்ட துன்பத்திற்கு அளவே இல்லை. அவர்களது தொழிலுக்கு எங்கு பார்த்தாலும் எதிர்ப்பு, முன்னேற்றத்திற்கு தடை, சமூக பிரஷ்டம் செய்யப்படுதல் போன்ற கொடிய இம்சைகள் அவர்களுக்கு இழைக்கப்பட்டு வந்தன.

பின்னால் லாமார்க், லயல், டார்வின், வாலேஸ், ஹக்ஸிலி, ஹேக்கல் முதலியோர்கள் பரிணாமத்தைக் குறித்துபல ஆராய்ச்சிகள் வெளியிட்டார்கள். அன்றும் புரோகிதர்களுடைய கூச்சலுக்கும் குருட்டு நம்பிக்கையிலே உழலும் மூடநம்பிக்கையாளர்களின் வாய்வீச்சுக்கும் பஞ்சம் ஏற்படவேயில்லை. சர். வில்யம் லாரன்ஸ் 1816—18க்குள் வெளியிட்ட "மனிதனுடைய இயற்கையும் உயிர் பிராணிகளின் இயற்கையும்" என்ற கட்டுரையால் மனித சமூகம் எந்த மூட நம்பிக்கையால் பெரிதும் கட்டுண்டு கிடந்ததோ அத்தகைய தளையானது தளர்ச்சியாக்கப்பட்டது. இதனால் அவரது புத்தகம் பிரசுரிக்க அனுமதிக்கப்படவில்லை. அவரது பிரயாசைகளும் வீணாயின. இதனால்தான் "இயற்கையில் மனிதனது பங்கு" என்ற நூலைதோழர் ஹக்ஸிலி வெளியிட ஆரம்பித்தபோது லாரன்ஸ் என்பவர் தடுத்தார். எனெனில் அவரது எதிர்கால வாழ்க்கை அதாவது அவருக்கு இருக்க வேண்டிய ஊக்கம் தடைப்படுத்தப்படும் என்பதாகக் கூறினார்.

வெகுகாலத்திற்கு பின்னால்தான், பூமியில் புதையுண்டு கிடந்த பூர்வீக மனிதனுடைய எலும்புகளைக் கண்டுபிடித்து

அதன்பயனால் ஏற்பட்ட ஆராய்ச்சிதான் மக்களால் ஒப்புக் கொள்ளப்பட்டு இருக்கிறது.

இதற்குப் பிறகுதான் உலகம் பிரளயத்தால் அழிக்கப்பட்டது என்ற எண்ணம் மக்களைவிட்டு அகல ஆரம்பித்தது. எனெனில் இவ் விஞ்ஞான ஆராய்ச்சியால் மதக்காரர்கள் சொல்லுகிற காலத்திற்கு வெகு காலத்திற்கு முன்தொட்டு மனிதன் இருந்து வந்ததாக அறியப்படுகிறது.

மத புத்தகங்களில் மனித உற்பத்தியைப் பற்றி சொல்லப்பட்ட கதைகளுக்கு மாற்றாக விஞ்ஞானிகள் எவ்வளவோ பாடுபட்டு ஆராய்ச்சி செய்து வெளியிட்ட உண்மை வாலாற்றை பொதுமக்கள் ஒப்புக்கொண்டது மதபக்தர்களுக்கு வயிற்றெரிச்சலாகத்தானிருக்கும். எனெனில் ஒரு சமயம் சர் ஆர்தர் கைத் ஒரு அறிக்கையில் "கற்றறிவாளர்களும் தாராள மனப்பான்மையுடையவர்களும் இதுவரை நம்பி வருவதைவிட இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் முதற்காரணத்தில் நம்பிக்கையுடையவர்கள் மிகுந்து இருக்கிறார்கள்" எனக் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் "இத்தகையவர்களைவிட ரோமன் கத்தோலிக்கர்களுக்குத்தான் நாம் அதிகமாக அஞ்ச வேண்டியிருக்கிறது" எனவும் குறிப்பிட்டிருக்கிறார். இங்கிலாந்தில் அவர்கள் தலை தூக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இது எவ்வளவு தூரத்திற்குச் சாத்தியமாகும் என்பது ஒருபுறமிருந்தாலும், இன்று எல்லாரும் ஒப்புக்கொண்ட மனித உடற்கூற்று சாஸ்திரத்தைப்பற்றி குற்றங்கண்டுபிடிக்க ஆரம்பித்து விட்டார்கள். அதிலும் பயங்கரத்தை விளைவிக்கக் கூடிய புரோகித கூட்டத்தாரே இப்பணியில் இறங்கியுள்ளார்கள். அதோடு நின்று விட்டார்களா, இல்லை. அரசியலைப்பற்றிய விவகாரங்களிலும் சமூகத்தைப் பற்றிய விவகாரங்களிலும் தலையிட்டு தங்கள் அபிப்பிராயத்தை நிலை நாட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். அதிலும் நாட்டின் கல்வியில் பூர்ண ஆதிக்கம் வகிக்கவும் அரசாங்கத்தில் சர்வாதிகாரத்தனம் செய்யவும் ஆரம்பித்து விட்டதாலேதான் இவ்வளவு தூரம் சொல்ல வேண்டியிருக்கிறது.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்குஏன் இவ்வுலகமில்லை	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (நான்காம்பதிப்பு) 200பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	சீர்திருத்தம் (ஈ. வெ. ரா.)	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18	கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பர்னார்ட்ஷா உபந்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷ்விக் முறை	0	1	0
22.	ஈ. வெ.ரா இலங்கை உபந்யாசம்	0	0	9
23.	சமதர்ம உபந்யாசம்	0	0	6
24.	சோதிடஆராய்ச்சி	0	4	0
25.	மனுநீதி விளக்கம்	0	2	0
26.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
27.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
28.	புது ரஷ்யா (200 பக்கம்)	0	8	0
29	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
30.	கர்ப்ப ஆட்சி	0	6	0
31	ராவணப் பெரியார்	0	5	0
32	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
33.	நரகம் எங்கே?	0	2	0
34.	ஜாதியை ஒழிக்க வழி	0	4	0
35.	கலைக்கியானம்அல்லது கைவல்யம்கட்டுரை	0	5	0
36.	பரிணாமவாதம் உண்மையா?	0	4	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai vilakam Press, Erode.